# நிர்வாகக்குழு & செயற்குழு உறுப்பினர்கள்

### தலைவர்



**V.K.செல்வக்குமார்**
MD-Chennal Mattox Lab Pvt. Ltd.
98410 78949

### செயலாளர்



**M.அமராபதி**
Managing Partner - Jairram Hi-Tech Products
94440 60885

### பொருளாளர்



**C.கொங்குவேள்**
MD - Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

### துணைத் தலைவர்கள்



**R.சண்முகவேல்**
MD - Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960



**V.P.வீரப்பன்**
MD-Sengam Transport
94432 66610

### இணைச்செயலாளர்கள்



**C.அரவித்தன்**
MD - K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808



**P.ரவி**
Chairman - SKV Educational Institution's
9842754245

### செயற்குழு உறுப்பினர்கள்:



**அருள் பொன்னுசாமி**
Director - Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266



**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593



**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394



**K.ஜெகன் நாதன்**
President - Sri Krishna Power Loom Society
94437 42696



**S.சீனிவாசன்**
MD - Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021



**K.ஜெகதீசன்**
Chairman - Unitech Gorup
91767 17131



**N.P.இசையழகள்**
Proprietor Ms. Esal & Co. Chartered Acou
94444 04595



**R.கந்தகார்த்திக்**
Proprietor- RKG & Sons Associates
90036 90695



**கதிர்வேல் கணபதியப்பன்**
Chairman - ISSM Business Schooll
9884022255



**K.G.ஜோதீஷ்குமார்**
JMD - Athiappa Chemicals (P). Ltd.,
9442488000



**A.நடராஜன்**
Proprietor - NU-Tech Components
9789973123



**K.நித்தியானந்தன்**
MD - Sri Devkrish Group
98422 29503



**S.குணசேகர்**
Managing Director - BRT Spinner Pvt. Ltd.,
9366635141



**விசா M.சன்முகம்**
Managing Partner - Sri Ambika Nets
9944933311



**T.P.நடராஜன்**
Managing Partner - V.M.D. Groups, Chithode
9842766789



**D. மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
Director - RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879



**பரமேஸ்வரி சின்னசாமி**
Director - P & C Projects (P) Ltd.,
9444070033



**Dr.சண்முகப்பிரியா MBBS**
AGS Complex & Ware Houses,
7824880456

# தலைவர் மடல்



**அன்புடையீர், வணக்கம்!**
**நலம் பல விழைகிறேன்...**

"உலகப் பொது மறையாம் திருக்குறள் எக்காலத்துக்கும், எவ்விடத்துக்கும், எவருக்கும் பொதுவாக, பொருத்தமாக இருக்கிறது என்ற கருத்தை மேடைகள் பலவற்றில் முழங்கியுள்ளார் என்று சிலம்பொலி செல்லப்பனாரைப் புகழ்கிறார் பேராசியர் க.அன்பழகன் அவர்கள். ஏப்ரல் 06 தமிழறிஞர் சிலம்பொலி ஐயா அவர்களின் நினைவு நாள். அன்னாரை நினைவு கூர்ந்து, கட்டுரை ஒன்று இவ்விதழில் வெளியிட்டுள்ளோம்.

கீழடி அகழ்வாராய்ச்சி மூலம் தமிழரின் தொண்மையான நாகரிகத்தை எவ்வாறு அறிகிறோமா, அதற்குச் சற்றும் குறைவின்றி கொங்கு நாட்டில் ஓர் நாகரிகம் கொங்குமாமணி புலவர் செ.இராசு போன்ற வரலாற்று அறிஞர்களால் வெளிக் கொணரப்பட்ட கொடு மணல் அகழ்வாராய்ச்சி எனும் நொய்யல் வெளி நாகரிகம்! அது குறித்து மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் தீட்டிய கட்டுரை இவ்விதழை அலங்கரிக்கிறது.

பள்ளிப் படிப்பைமுடித்து அடுத்து எங்கு சேரலாம், என்ன படிக்கலாம் என்று வினவும் மாணவர்களுக்கு விடை தரும் கையேடு ஒன்றை மென் நகலாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. "க்யூ ஆர்" கோடு மூலமாக பதிவிறக்கம் செய்து பயன் பெறலாம்.

பேராசிரியர் சு.குருநாதன் அவர்களும், திரு.செ.க.முத்துசாமி அவர்களும் இணைந்து எழுதிய "கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை" என்ற நூலுக்கு, நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் கொங்கு மாமணி திரு.நல்ல.கோவிந்தசாமி அவர்கள் வழங்கிய அணிந்துரையும் நூல் நயம் பகுதியில் இடம் பெறுகிறது.

உறுப்பினர்களும், உறவினர்களும் தரும் நன்கொடைகளால் நமது சங்க மாத இதழ் நன்முறையில் அச்சிடப்பட்டு வெளிவருவதோடு, மாதா மாதம் கணிசமான தொகையும் மிச்சமாகி வருகிறது என்பதை மகிழ்வோடு பகிர்ந்து கொள்கிறேன்.

> **"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
> **கொள்வர் பயன் தெரிவார்"**
> **(குறள்:104)**

உதவியின் பயனைத் தெரிந்தவர்கள், தினையளவே ஒருவன் நன்மை செய்தாலும்அதனை பனையளவாக உளங் கொண்டு போற்றுவார்கள் என்று இக்குறளுக்குப் பொருளுரைக்கிறார் புலியூர் கேசிகன் அவர்கள்.

**அனைவருக்கும் சித்திரைத்**
**திருநாள் நல்வாழ்த்துகள்!**

அன்புடன்
**வீ.க.செல்வக்குமார்**
தலைலர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**தணிக்கையாளர்:**



R.பாலச்சந்திரன் CA

**Published & Edited by:**
K.K.Ramesh on behalf of Kongu Nanbargal Sangam,
Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street, Royapettah, Chennai - 600014.
Printed by: M.Shaik Dawood, Dawood Graphics, No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.

**ஆசிரியர் குறிப்பு**
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.



# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)






**FACILITIES**

| | |
|---|---|
| AC Rooms | TV - CCTV - Wifi |
| Double Cot | Safety Secure |
| Water Bottle | Bathroom Heater |
| Towel | Drinking Water Dispenser |

**Discount for Members**

**"தீரன் சின்னமலை மாளிகை"**
நெ.72, பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**chennaikongu@gmail.com**
**044 - 4266 8046**
**Cell : 93815 45451**



## கொங்கு மகளிர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Sharing Room | Safety Secure |
| Double Cot | Bathroom Heater |
| CCTV - Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

**chennaikongu@gmail.com**
**044 - 4266 8046 | Cell : 63839 85919**

**"கொங்கு நாடு இல்லம்"** 27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014




## கொங்கு மாணவர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Double Cot | Safety Secure |
| CCTV | Bathroom Heater |
| Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

**"வெள்ளி விழா இல்லம்"** 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.

**www.kongunanbargalsangam.com**



# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்..

தமிழ் புத்தாண்டு பிறந்திருக்கும் இந்த இனிய தருணத்தில் உங்கள் அனைவரையும் இம்மடல் வாயிலாக சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

இப் புத்தாண்டு உங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும்,நலன்களையும் அருளட்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நடந்து முடிந்த செயற்குழு கூட்டத்தின் ஒப்புதலுக்கேற்ப சென்னை ராயப்பேட்டையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மாளிகையின் பணிகளைப் பராமரிக்கும் பொறுப்பை நமது உறுப்பினர் திரு.பார்த்திபன் அவர்கள் நிர்வகிப்பார் என்னும் தகவலை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

சங்கத்தின் சேவைகளை மேம்படுத்துவதற்கான பணியில் தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறோம் என்பதையும் இத்தருணத்தில தெரிவிக்க விரும்புகிறேன்! நமது சங்கத்தின் மாதாந்திர இதழுக்கு ஒரு வருடத்திற்கு விளம்பரம் அளித்து ஊக்கம் அளித்த தலைவர் வீ.க.செல்வகுமார்,செயற்குழு உறுப்பினர் திரு.கந்த கார்த்திக், “அம்மாநாணா” திரு. கோவிந்தசாமி ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயலாளர் வீரபாண்டி G.சண்முக சுந்தரம் கடந்த மார்ச் 23 - ம் தேதி காலமானார். அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய அளவில் நியாயமான முறையில் வணிக நடைமுறைகளைக் கடைபிடித்தமைக்காக சக்தி மசாலா நிறுவனத்திற்கு மும்பையில் ஜம்னாலால் பஜாஜ் தேசிய விருது வழங்கப்பட்டது.இந்த உயரிய சிறப்பைப் பெற்றமைக்காக சக்தி மசாலா நிறுவனத் தலைவர் திரு.பி.சி.துரைசாமி மற்றும் நிர்வாக இயக்குநர் சாந்தி துரைசாமி அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

ஏப்ரல் 6 அன்று மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனாரின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. மொழிக்கான அன்னாரது உயரிய சேவையை நினைவு கூர்கிறேன்!

கொங்கு சமுதாயம் என்றாலே அனைவரது நினைவிலும் முதலில் வருவது முதல் சுதந்தரப் போராட்ட வீரரான மாவீரன் தீரன் சின்னமலை அவர்கள்! கொங்கு தலைமகனின் பிறந்தநாள் வரும் ஏப்ரல் 17 அன்று கொண்டாடப்பட உள்ளது.மாவீரனின் வாழ்க்கை வரலாற்றை இன்றைய தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் கொண்டு சேர்ப்பது நம் தலையாய கடமையாகும்.இன்றளவு தகவல் தொழில்நுட்பம்,அறிவுப்பரவல் எளிதாகக்கிடைக்காத அக்காலகட்டத்தில் கொரில்லா போர் முறை போன்ற நுட்பங்களைப் பிரயோகித்தவர் தீரன் சின்னமலை!!தீரன் சின்ன மலை குறித்த அனைத்து ஆவணங்களையும் ஆங்கில அரசு அழித்ததோடு தன் ஆட்சிக்காலம் முழுவதும் விடுதலை வீரர்கள் வரலாறு வெளிவருவதை தடை செய்தது. ஆனாலும் நமது பண்பாட்டோடு இணைந்த கதை சொல்லும் வழக்கம், கும்மிப் பாடல்கள் வாயிலாக தீரனின் வரலாறு நிலைத்து விட்டது.புலவர் குழந்தை அவர்கள் தனது தாத்தா மூலம் 1900 களின் ஆரம்பத்தில் முழுக்கதையையும் கேட்டறிந்தார்.அவர் எழுதிய தீரன் சின்னமலை வரலாறே முதல் நூலாகக் கருதப்படுகிறது.

வாழ்க தீரன் சின்னமலையின் புகழ்!!

வளர்க கொங்கு சமுதாயம்!!

நன்றி வணக்கம்,

**எம்.அமராபதி**

செயலாளர்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# ER Business
## Infrastructure LLP




- Strategic Land Acquisition and Aggregation for Industrial and Warehouse Development.
- Cost-Effective Construction, Fabrication and Pre-Engineered Solutions (PEP) for Industrial and Warehouse Structures.
- Comprehensive Consultancy and Advisory Services for Industrial Property Development and Management.
- Financial Consultancy for Land Acquisition, Aggregation, and Existing Industrial/Commercial Properties & Warehouses.



**Managing Partner**
MJF Lion R. RAVICHANDRAN
9884031303 / 75500 70345
erllp4449@gmail.com

**Site office Address**
Esai Industrial Park, Survey No. 3/2C,
Sriperumpudur - Kundrathur Road,
Sriperumpudur 602105

Registered office: 38/40, 2nd Floor, North Boag Road, T. Nagar, Chennai 600 017



## தமிழறிஞர்

# சிலம்பொலி சு.செல்லப்பன்

கணித ஆசிரியராகப் பணியைத் தொடங்கி தமிழறிஞராக பெரும் புகழ் பெற்றவர் சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்கள். 1928-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் நாள் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சிவியாம் பாளையம் என்ற கிராமத்தில் பிறந்தவர்.

சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை தலைமையில் 1953ஆம் ஆண்டு நடந்த இராயபுரம் இலக்கிய மன்ற விழாவில் "சிலப்பதிகாரம்" என்ற தலைப்பில் சு.செல்லப்பன் நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த அவர் சிலம்பொலி என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டினார்.

திருச்செங்கோடு நகரில், பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு, 'கண்ணகி விழா' என இலக்கிய அரங்கம் பல்லாண்டுகள் நடத்த முக்கியக் காரணமாக விளங்கியவர் சிலம்பொலியார்.

சென்னை ஒய்.எம்.சி.ஏ. மன்றத்தில் 'மணிமேகலை' என்ற தலைப்பில் பதினெட்டு மாதங்கள் பதினெட்டு பொழிவுகள் என்ற அளவில் மிகச் சிறந்த தொடர் சொற்பொழிவாற்றினார் சீவக சிந்தாமணி என்ற காப்பியத்தின் தலைப்பில், வடசென்னை தமிழ் வளர்ச்சிப் பேரவையின் சார்பில் பதினைந்து பொழிவுகளாக ஓராண்டுக்காலம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி இக்காப்பியத்தின் சிறப்பை பரப்பினார்.

1990ஆம் ஆண்டு வடசென்னை தமிழ் வளர்ச்சிப் பேரவையின் சார்பில் பத்துப்பாட்டு நூல்களையும், பதினென் கீழ்க்கணக்கு நூல்களையும் பதினெட்டு பொழிவுகளில் தொடர்சொற்பொழிவாக நிகழ்த்தி சாதனை படைத்தார்.

பத்துப்பாட்டு பற்றிய பேச்சுக்களைத் தொகுத்து, 'சங்க இலக்கியத் தேன்' என்ற தலைப்பில் மூன்று அரிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாலடியார் நூலுக்கு இவர் எழுதியுள்ள விளக்கவுரை தமிழர்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இருபது ஆண்டுகள் கடுமையாக உழைத்து இவர் உருவாக்கிய செம்மொழித் தமிழ் அகப் பொருள் களஞ்சியம், பதினான்கு தொகுதிகளாக ஆறாயிரம் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களுக்கு ஆய்வு அணிந்துரைகளை எழுதியுள்ளார். புலவர் குழந்தை அவர்களின் இராவண காப்பியத்தை தொடர் சொற்பொழிவுகளாக நிகழ்த்தி உரையாற்றி உள்ளார்.

தமிழ் வளர்ச்சித்துறைஇயக்குனர் தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகப் பதிவாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் போன்ற பதவிகளை வகுத்து தமிழுக்குப் பெருமைசேர்த்தார்.

மறைந்த முன்னாள் முதல்வர்களான பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்.

சிலப்பதிகாரஅறக்கட்டளையை நிறுவி, அதில் சிலப்பதிகார காப்பியத்துக்கு அளப்பரிய தொண்டு புரிந்த ஒருவருக்கு "இளங்கோ விருது" உடன் ஒரு இலட்ச ரூபாய் நிதியும் வழங்கி கௌரவித்தார்.

நமது சங்கப் பொருளாளரும் அவரது புதல்வருமான திரு.கொங்கு வேள் அவர்களும், அவரது புதல்வி கொங்கு மாமணி திருமதி. மணிமேகலை புட்பராசு அவர்களும், இவ்வறக்கட்டளையைத் தொடர்ந்து தொய்வின்றி, சீரிய முறையில் நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

# ESAI GROUP OF COMPANIES

- Esai Tax Consultants Pvt. Ltd.
- Esai Professional Services Pvt. Ltd.
- Esai HR Service Pvt. Ltd.
- Esai RK Tally Solution
- Esai Law & Co
- Esai Industrial Park
- Esai Industrial Projects
- ER Business Infrastructure LLP

*Services under one roof*

- Income Tax
- Goods & Service Tax (GST)
- Cost Audit
- Internal Audit
- Stock Audit

- Company Law
- LLP
- Partnership Firm
- Trusts
- Trade Mark
- Copyright & ISO

- ESI
- EPF
- Labour Act
- Factories Act
- Man Power Supply

- Accounting
- Legal Services
- Deeds & Documentations
- Investments
- Loans & Financial Consultancy

Tally
- Sales
- Service
- Support
- Training
- Customization
- Consultants

Properties
- Purchase
- Development
- Construction
- Fabrication
- Consultancy
- Sales

## CA. N.P. ESAIALAGAN

No. 38/40, 2nd Floor North Boag Road T. Nagar Chennai 600017
Ph: 044-28151596 / 28151598 / 28151571 / 28151590 Mobile: 9444404595 / 9941577777
https://esaiandco.com/ Email: esaifca@gmail. com / esaiandco@gmail.com

OUR BRANCHES

- **Ambattur:**
No.18/2A, Old Township Office Road, Venkatapuram, Ambattur, Chennai – 600 053. Mobile: 94453 94594
- **Salem:**
No.95, Shri Adhithya Shopping Plaza, II Floor, Arisipalayam Main Road, Salem – 636 009. Ph: 0427-4262 182 Mobile: 94449 54593
- **Kallakurichi:**
Esai Towers, Chennai Byepass Road, Emappair, Kallakurichi – 606 202. Mobile: 94456 04592 / 94453 94594
- **Hosur:**
Esai Group of Companies, A13/15, 1st Floor, TNHB Colony, Bagalur Road Hudco, Hosur – 635 109. Mobile: 75021 11987 / 94450 68763
- **Sriperumbudur:**
Esai Industrial Park : S.No.8/2A, Kundrathur - Sriperumbudur Road, Sriperumbudur, Kancheepuram – 602 105 Mobile: 9884031303, 7550070345

அட்டை சொல்லும் சேதி

# “விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை”




தீர்த்தகிரி கவுண்டரின் பிறப்பிடமான கொங்கு நாடு, மைசூர் மன்னர் ஆட்சியில் இருந்ததால், அந்நாட்டின் வரிப்பணம், அவரது அண்டைய நாடான சங்ககிரி வழியாக மைசூர் அரசுக்கு எடுத்துச் செல்லப்படும். ஒருநாள், தனது நண்பர்களுடன் வேட்டைக்குச் சென்ற தீர்த்தகிரி, அவ்வரிப்பணத்தைப் பிடுங்கி, ஏழை எளிய மக்களுக்கு விநியோகம் செய்தார். இதைத் தடுத்த தண்டல்காரர்கள் கேட்ட போது, “சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை பறித்ததாக மைசூர் மன்னர் ஹைதரலியிடம் சொல்” என்று சொல்லி அனுப்பினார். அன்று முதல், அவர் தீரன் சின்னமலை’ என்று அழைக்கப்பட்டார்.

1801-இல் ஈரோடு காவிரிக்கரையிலும், 1802-இல் ஓடாநிலையிலும், 1804-இல் அறச்சலூரிலும் ஆங்கிலேயர்களுடன் நடைபெற்ற போர்களில் சின்னமலை பெரும் வெற்றி பெற்றார். ஓடாநிலைப் போரில் ஆங்கிலத் தளபதி கர்னல் மேக்ஸ்வெல் தலையைக் கொய்து மொட்டையடித்துச் செம்புள்ளி கரும்புள்ளி குத்தி ஊர்வலம் விட்டது குறிப்பிடத்தக்கது. சின்னமலையின் ஓடாநிலைக் கோட்டையைத் தகர்க்கக் கள்ளிக்கோட்டையிலிருந்து மிகப்பெரும் அளவில் பீரங்கிப்படை வந்தது. சுபேதார் வேலப்பன் அறிவுரைப்படி சின்னமலை ஓடாநிலையிலிருந்து தப்பிப் பழனிமலைத் தொடரில் உள்ள கருமலை சென்றார்.

போரில் சின்னமலையை வெல்ல முடியாது என்று கண்ட ஆங்கிலேயர் சூழ்ச்சி மூலம், சின்னமலையைக் கைது செய்து சங்ககிரிக் கோட்டைக்குக் கொண்டு சென்று போலி விசாரணை நடத்தி ஜூலை 31, 1805 ஆடி 18 அன்று தூக்கிலிட்டனர். தம்பியரும், கருப்ப சேர்வையும் உடன் வீரமரணம் எய்தினர். சின்னமலை நினைத்திருந்தால் கொங்குநாட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வரிவசூலில் பத்தில் மூன்று பங்கு பெற்றுத் தொடர்ந்து ஆட்சி செலுத்தி சுதேச சமஸ்தானம்போல 1947 வரை விளங்கியிருக்கலாம். ஆங்கிலேயரும் அவ்வாறே வேண்டிக்கொண்டனர். ஆனால் மாவீரன் சின்னமலை அதை மறுத்து வீரமரணம் அடைந்தார். மாவீரன் சின்னமலை ஆங்கில வெள்ளத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கினார்.




ULTIMATE QUALITY
ON TIME DELIVERY

ULTRA READYMIX CONCRETE PRIVATE LIMITED

SF. NO. 668, 669, Kulathur Road, Neelambur, Coimbatore - 641062.

Toll Free : 1800 425 0003 | Visit @ www.ultrarmc.com

TAMILNADU | KERALA

# நூல் நயம்

# "கொங்கு வேளாளர் வரலாற்றில் திருப்பு முனை"

## "கொங்கு மாமணி திரு.நல்ல. கோவிந்தசாமி அவர்களின் அணிந்துரை

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணியர் ஆகப் பெறின்"**

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாய் விளங்கி வரும் பேராசிரியர் குருநாதனும், திரு செ.க.முத்துசாமியும் எனக்கு மிகவும் வேண்டிய நெருங்கிய நீண்டகால நண்பர்கள் ஆவர்.

இந்நூலாசிரியர் முத்துசாமி அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றி எழுத்துலகுக்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் அரிய படைப்புதான் 'கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை" என்ற நூல்.

கொங்குநாடு, கொங்கு வேளாளர் பற்றியெல்லாம் ஏற்கெனவே பல நூல்கள் வெளிவந்திருந்தாலும் அவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது இந்நூல். கொங்கு இனத்திற்கும், இன்றைய இளைய தலைமுறையினருக்கும் கிடைத்த வரப்பிரசாதமாக இந்நூலை நான் கருதுகிறேன்.

**"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**

**பண்புடை யாளர் தொடர்பு"**

இதனை உண்மையாக்கியவர்கள் சு.குருநாதனும் செ.க.முத்துசாமி அவர்களும் ஆவர்.

அவர்களது இந்த அளப்பரிய பணியை நான் போற்றுகின்றேன்.

கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை என்ற இந்நூல் 1921-இல் தொடங்கி இன்றுவரை உள்ள கொங்கு வேளாளரின் கலாச்சாரம், கல்வி, பொருளாதாரம், இட ஒதுக்கீடு போன்றவற்றை புள்ளி விவரத்தோடு சொல்வதுதான் சிறப்பு.

இந்நூலாசிரியர்கள் இந்நூலை 1921 முதல் 1947 வரை ஒரு காலகட்டமாகவும், 1947 முதல் 1974 வரை ஒரு காலகட்டமாகவும், 1974 முதல் இன்று வரை ஒரு காலகட்டமாகவும் எடுத்துக்கொண்டு படைத்துள்ளனர். இந்நூலிலிருந்து சில கருத்துகளை மட்டும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

ஆரம்ப நிலை என்ற தலைப்பில் 1927 முதல் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ சட்டம் மூலம் பிராமணர், பிராமணர் அல்லாதார், முகமதியர்கள், கிருஸ்துவர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு முறை இருந்து வந்ததாகவும், ஐ.ஏ.எஸ். தேர்வில் 1967-இல் பிராமணர்கள் 42% இடங்கள் பெற்றதாகவும், கொங்கு வேளாளர் இனத்திற்கு ஒரு இடம் கூட கிடைக்காததையும் சுட்டுகிறது. ஆனால், பிராமணரையும், கொங்கு வேளாளர் இனத்தையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பது எப்படி என்று வருத்தத்தோடு சொல்லுவது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் 85% கொங்கு வேளாளர்கள் படிப்பறிவில்லாதவர்கள் என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றனர்.

**காகா கலேல்கர் கமிசன்:**

1954-ஆம் ஆண்டில் இக்கமிசன் அகில இந்திய அளவில் 2399 சமூகத்தை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப் பரிந்துரைத்த போதும்கூட கொங்கு வேளாளர் இனம் அப்பட்டியலில் இடம்பெறவில்லை. அக்கமிசன் நிர்ணயித்த அளவுகோலின்படி பார்த்தால் நமது சமுதாயத்தை அப்பொழுதே பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டும். ஆனால் சேர்க்காதது ஏனோ தெரியவில்லை.

**விடியல் ஆரம்பம்:**

1967 முதல் 1974 வரை குரூப் 1 தேர்வில் நம் இனத்தவர் ஒருவர் கூட தேர்ச்சி பெறாத நிலையில் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற கூற்றை மெய்யாக்கும் வகையில் கொங்கு இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் முயற்சியால் நம் இனத்தவர் அனைவரும் ஒன்றுபட்டனர். அப்போது தி.மு.க ஆட்சி நடைபெற்றது. அச்சமயம் ஒட்டன்சத்திரம் எம்.எல்.ஏ. நாச்சிமுத்து அவர்கள் நம் இனத்தின் வளர்ச்சிக்கு உத்வேகத்தோடு செயல்பட்டதாக இந்நூல் குறிப்பிடுகிறது. அவரோடு சேர்ந்துள்ள கரூர் எம்.எல்.ஏ. எஸ்.நல்லசாமியும், ஈரோடு எம்.எல்.ஏ. மு.சின்னசாமியும் மற்றச் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்த பெருமுயற்சியால் நமது இனம் பிற்படுத்தப்பட்ட பிரிவில் சேர்க்கப்பட்டது. அதற்கு அன்றைய முதல்வர் கருணாநிதியின் முழு

ஒத்துழைப்புக் கிடைத்ததுதான் சிறப்பு என்று இந்நூல் சுட்டுகிறது. 11.04.1975-இல் கலைஞர் சட்டமன்றத்தில் நம் கோரிக்கைகள் ஏற்கப்பட்டதாகக் கூறிய போதுதான், நம் இனத்திற்கு வெளிச்சம் கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றனர். அந்த நாள் தான் "கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனையாக" அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

**தேர்வாணையக் குழுவில் இடம்:**

1929-இல் டாக்டர் சுப்பராயன் அவர்களின் காலத்திலிருந்தே தேர்வாணையக்குழு இருந்தும் 44 ஆண்டுகளாக யாரும் சொல்லாத கருத்தை பேராசிரியர் அ.பழனிசாமி அவர்கள் முன் வைத்தார்கள். அது தேர்வாணையக் குழுவில் நம் இனத்தவர் இடம் பெறவேண்டும் என்பது ஆகும். அவர்தான் அந்த முதல் விதையை ஊன்றினார். அவரது கருத்தை அன்று நமது சமுதாயத்தைச் சேர்ந்த தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஏற்றுக்கொண்டு அன்றைய முதல்வர் கலைஞரிடத்தில் தேர்வாணையக் குழுவில் இடம் வேண்டும் என்ற கோரிக்கையை மனுவாக அளித்தனர். அன்றுதான் "தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும்" என்ற வாக்கு நம்மவர்க்கு உண்மையானதை இந்நூலாசிரியர்கள் மகிழ்ச்சியோடு புலப்படுத்துகின்றனர்.

ஒரே நாளில் தேர்வாணையக் குழுவில் நமக்காக புதிய உறுப்பினர் பதவியை உருவாக்கிய ஆணையும், பேராசிரியர் திரு.பழனிசாமி அவர்கள்தேர்வாணையக் குழுவில் இடம் பெறுவதற்கான ஆணையும் ஒன்றாக வந்ததைச் சுட்டுகிற படைப்பாளிகள், கலைஞரை நாம் என்றும் மறக்க முடியாது என்று கூறி, நன்றி மறவாப் பண்பை வெளிப்படுத்துகின்றனர்.

**பாராட்டு விழா:**

கோவையில் கொங்கு அமைப்பும் மாணவர்களும் இளைஞர்களும் சேர்ந்து கலைஞருக்குப் பாராட்டுவிழா எடுத்தனர். அப்பாராட்டுவிழாவை ஏற்றுக் கொண்ட கலைஞர் அவர்கள் "நீங்கள் பெற்றிருப்பது சலுகைகள் அல்ல. உங்கள் உரிமைகள்" என்று குறிப்பிட்டார். மேலும் சமூக ரீதியாகத்தான் பின்தங்கியோருக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியாக அல்ல என்றும் கூறியதை இந்நூலாசிரியர்கள் பாராட்டுவது போற்றுதற்குரியது.

**மாநில அமைப்பு:**

பொறியாளர் திரு.கே.எஸ். கோவிந்தசாமி அவர்கள் முயற்சியில் உருவாக்கப்பட்ட "மாநில கொங்கு நண்பர்கள் சங்கம்" எனும் அமைப்புக்கு கோவை செழியன் அவர்களை முதன்முதலாகத் தலைவராக்கினர். சென்னையில் 'கொங்கு நண்பன்' இதழ் வெளி வந்த நேரத்தில் 1981-இல் அனைத்துக் கொங்கு மாவட்டங்களிலும் அமைப்புகள் உருவாகின. அப்பணியைச் சிறப்பாகச் செய்தவர் பொறியாளர் திரு.கோவிந்தசாமி என்றும், அவர் சங்கத்தின் செயலராகப் பணியாற்றிய காலம்தான் நமக்குப் பொற்காலம் என்றும் இந்நூல் குறிப்பிடுகிறது.

**சங்கக் கட்டடம்:**

தியாகராய நகர் திரு.பழனியப்பன் உதவியால் நடிகர் நடிகைகளை வைத்து, நட்சத்திரக் கலைநிகழ்ச்சி நடத்தி, கட்டிட நிதிக்காக 60,000 ரூபாய் நிதி திரட்டப்பட்டது. மேலும் திரு.பழனியப்பன் அவர்களும் 5000 ரூபாயைக் கட்டிட நிதிக்காக வழங்கியுள்ளார் என்று இந்நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். திரு.கோவிந்தசாமி அவர்கள் ஊர் ஊராகச் சென்று நிதி திரட்டியதையும் ஏர் உழுதவர் ஒருவர் 5 ரூபாய் நிதி கொடுத்ததையும் சுட்டுகிற அவர்கள், சங்கத்திற்கு நிரந்தர முகவரியைத் தேடித்தந்தவர் திரு. கோவிந்தசாமி அவர்களே என்று பெருமைப்படுகின்றனர். இங்கே "முயற்சி திருவினை யாக்கும்" என்ற வாக்கு உண்மையாயிற்று.

**கமிசன்:**

மண்டல் கமிசன் பற்றிக் குறிப்பிடுகிற நூலாசிரியர்கள் 1979-இல் மண்டல் கமிசன் பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இட ஒதுக்கீட்டை வழங்கியதைக் குறிப்பிட்டு அதன் பலனை பின் தங்கிய மக்கள் அடைந்தது 1992-இல் தான் என்று விளக்கம் தருகின்றனர். 1975-இல் கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் சேர்த்ததினால் மத்திய அரசின் ஒபிசி பலன்கள் நமது இளைஞர்களுக்கு கிடைத்தது. இதை இன்றைய நமது இளைஞர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**கொங்கு இனக்காவலர்:**

ஈரோடு மாவட்டம் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த சட்டமேதை அ.பழனிசாமி அவர்கள் தேர்வாணையக் குழு உறுப்பினராக இருந்த காலத்தில் நம் சமுதாயத்திற்கு ஆற்றிய பணி அளப்பரிது என்று சொல்லி அவரை கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை என்ற இந்த நூலில் "கொங்கு இனக்காவலர்" என்று போற்றியிருப்பது நமக்கெல்லாம் பெருமை சேர்க்கிறது.

**கொங்கு இனவழிகாட்டி:**

சென்னையில் கொங்கு நண்பர்கள் சங்கம் ஆரம்பித்த பின் 1971-இல் சேலத்திலும் சங்கம் ஆரம்பித்து சிறப்பாக நடந்தது. இதற்கு பெரும் உதவியாக இருந்து உற்சாகம் ஊட்டியது ஒட்டன் சத்திரம் எம்.எல்.ஏ. நாச்சிமுத்து அண்ணன் அவர்கள் தான் என்று கூறும் திரு.என்.எம். காளியண்ணன் அவர்கள் நாச்சிமுத்துவை "கொங்கு இன வழிகாட்டி" என்று குறிப்பிடுவதாக இந்நூல் கூறுகிறது. அவர் நமது சமுதாயத்திற்கு ஆற்றிய பணி வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

**கொங்கு குலச்சிற்பி:**

கொங்கு இனம் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் இடம்

பெற்றது, தேர்வாணையக் குழுவில் உறுப்பினர் பதவி பெற்றது, மாநிலக் கொங்கு நண்பர்கள் சங்கம் உருவானது, சென்னை சங்கத்திற்கு இடம் வாங்கியது ஆகிய இந்த நான்கிலும் பொறியாளர் திரு.கோவிந்தசாமியின் பங்கு மகத்தானது. மறக்க முடியாத அந்த மனிதருக்கு நூலாசிரியர்கள் "கொங்கு குலச்சிற்பி" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது பொருத்தமானதேயாகும்.

கொங்கு வேளாளர் சமுதாயம் தழைத்தோங்கப் பாடுபட்ட சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் பெயர்களையும், அவர்களுக்குஉறுதுணையாய் இருந்த இளைஞர்கள் பெயரையும், அன்று உதவி புரிந்த ஏனையோரையும், மாணவ மணிகளையும் கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை என்ற இந்நூல்வாயிலாக அறியமுடிகிறது. அவர்கள் அனைவரது பங்களிப்பு மிகவும் போற்றத்தக்கதாகும்.

இந்நூலைப் படித்து கொங்கு வேளாளர் இனம் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது.

தற்கால, வருங்கால இளைஞர்கள், மாணவர்கள் இந்நூலைப் படித்து நம் சமுதாய உயர்வுக்குப் பாடுபட்டவர்களை நினைவில் கொண்டு, மேலும் சமுதாயம் உயர அனைவரும் பாடுபட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஒவ்வொருவர் வீட்டிலும் இந்த வரலாற்று நூல் இருத்தல் வேண்டும் என்பதே என் எண்ணம்.

'கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை" நம்மில் பலரது வாழ்வின் எழுச்சி முனை கடந்து வந்த பாதையின் பாதச்சுவடு சீர்மிகு சிந்தனையாளர்களின் உன்னத படைப்பு ஏற்றமிகு எண்ணங்களின் எழுச்சி வெளிப்பாடு நல்ல நூலைப்போல ஒரு சிறந்த நண்பன் இல்லை இது உங்களுக்கான புத்தகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**வாழ்க வளமுடன்**

**இப்படிக்கு**

**திரு.கொங்குமாமணி நல்ல.கோவிந்தசுவாமி**

**25-02-2020**

| | |
|---|---|
| **தலைப்பு** | **: கொங்கு வேளாளர் வரலாற்றின் திருப்புமுனை;** |
| **நூலாசிரியர்கள்** | **: பேராசிரியர் சு. குருநாதன் - செ.க.முத்துசாமி;** |
| **உரிமை** | **: ஆசிரியர்களுக்கு;** |
| **பதிப்பகம்** | **: சம்பிரித்தி பதிப்பகம், அரும்பாக்கம் சென்னை 106;** |
| **கணினி வடிவம்** | **: அகரம் கணினி மையம், திருவல்லிக்கேணி, சென்னை 5,** |
| **அச்சிட்டோர்** | **: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.** |
| **முதல் பதிப்பு** | **: மார்ச் 2020. விலை ரூ.250.00** |

**நூல் கிடைக்குமிடம்:**

| | | |
|---|---|---|
| S.K.முத்துசாமி (சம்பிரித்தி பதிப்பகம்) | சென்னை | 98405 47971 |
| சு. குருநாதன் கே.எம்.நல்லசாமி | கரூர் மாவட்ட கொங்கு நண்பர்கள் சங்கம்-கரூர் | 90473 43801<br>95789 32323 |
| சேலம். கோவிந்தராஜன் | சேலம் | 98653 18851 |
| அத்தனூர் ஆர். ஜெயசுப்ரமணியம் | ராசிபுரம் | 94422 28719 |
| R. மணிசங்கர் | சேலம் | 98427 30017 |
| மெர்க்குரி கெமிக்கல்ஸ் காவேரி பீட்ஸ் வெங்கடாசலம் | நாமக்கல் | 94433 21218 |
| டாக்டர் க. முத்துகுமார் | பரமத்தி வேலூர் | 9443231403 |
| K.S.K. வேல்மணி (எ) மணி | பெங்களூரு | 96884 20700 |
| N.M. குமாரசாமி | கோவை, திருப்பூர் | 94420 19252 |
| எம். கந்தசாமி பாண்டியன் | திருப்பூர் | 63826 39171/ 98948 99638 |
| க.ராமசாமி | குமாரபாளையம் | 96988 68495 |
| M. சந்தரசேகரன் CAK பெட்ரோல் பங்க் | ஊத்தங்கரை | 94439 83330 |
| எஸ்.எம். சிவசாமி | சத்தியமங்கலம் | 94429 31221 |
| கொங்கு என். கொளந்தசாமி | ஈரோடு | 98427 43535 / 94430 06666 |
| இல. சடையப்பன் விமல் அச்சகம் | ஒட்டன்சத்திரம் | 93606 79998 |
| P.S.அன்பழகன் | ஆத்தூர், தலைவாசல் | 93440 30549 |
| S.ஈஸ்வரமூர்த்தி | கோபி | 99655 18018 |


SUN-X CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
www.sunxconcrete.org



# அருள்மிகு விசாலாட்சி உடனுறை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கிளாம்பாடி கிராமம் அருள்மிகு விசாலாட்சி உடனுறை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 30.04.2025 சித்திரை மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை அன்று காலை 9.00 - 9.45 மணிக்குள் நடைபெறுகிறது.

அனைவரும் வாரீர் ! அம்மையப்பன் அருள் பெறுவீர் !!



# வாழ்த்துக்கள்

போரூர் கொங்குநல சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றிருக்கும் தலைவர் திரு வேலுமணி அவர்களையும், துணைத் தலைவர்களாக பொறுப்பேற்று இருக்கும் திரு துரைசாமி அவர்களையும் மற்றும் திரு முரசொலி அவர்களையும், செயலாளராக பணியாற்றும் திரு அருள்கண்ணன் அவர்களையும் துணைச் செயலாளராக பொறுப்பேற்றிருக்கும் திரு முருகேசன் மற்றும் திரு விஜயகுமார் அவர்களையும் பொருளாளராக பதவியேற்றிற்கும் திரு மணிவேல் அவர்களையும் மற்றும் துணைப் பொருளாளராக பதவி ஏற்றிருக்கும் திரு மோகன் மற்றும் மோகன் குமார் அவர்களையும் மற்றும் இதற்கு பக்கபலமாக செயல்பட போகும் அனைத்து நிர்வாக குழு உறுப்பினர்களையும் மனதார பாராட்டுகிறோம். புதிய நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுதல்கள்.

## தன்னம்பிக்கை சிந்தனை

...............

**த**குதியும் வாய்ப்பும்
கைகுலுக்கும் போது
வளர்ச்சி மழை பொழியும்.

...............

**ந**ம்மை நாமே
உயர்த்திக் கொள்வதுதான்
நம்மை வீழ்த்த
நினைத்தவர்களை
வெல்வதற்கான சிறந்த வழி.

...............

**தொ**டர்ச்சியான பயிற்சி
முயற்சிக்கு
மூலதனமாகிறது.
தொடர் முயற்சி
தோல்வியைத் துரத்தி
அடிக்கிறது.

...............

**மு**யற்சி செய்வதில்
மகிழ்ச்சியடைபவர்கள்
முன்னேற்றத்தின் முகவரி
ஆகிவிடுகிறார்கள்.

...............

**வா**ய்ப்பை
வசப்படுத்துவதற்கு
திறமையைத் திடப்படுத்த
வேண்டும்.

**- சிந்தனைக் கவிஞர் கவிதாசன்**

# PLUS MAX GROUP OF COMPANIES



**Dato' S. Prakadeesh Kumar**
GROUP MANAGING DIRECTOR
Plus Max Group of Companies



## WE OFFER

* Brewery & Distillery
* Import and Export Trading
* Logistics
* Supply Chain
* Duty Free Outlets
* Oil and Gas
* Education
* Hospitality
* Precious Metals Supply
* NBFC Finance
* Real Estate
*Manufacturing
* Infrastructure
* Private Port



**MALAYSIA, INDIA, SINGAPORE, AUSTRALIA, UAE, HONG KONG,RWANDA, THAILAND**

+(60)-320266100 plusmax.com.my

# படித்ததில் பிடித்தது

**தகவல் : போரூர் மணிவேல்**

என் அப்பா வயதாகிவிட்டார், நடந்து செல்லும்போது சுவரின் ஆதரவைப் பெறுவார். இதன் விளைவாக சுவர்கள் நிறமாற்றம் அடைந்தன, அவர் தொட்ட இடமெல்லாம் அவரது கைரேகைகள் சுவர்களில் பதிந்தன..

என் மனைவி இதை வெறுத்தார், சுவர்கள் அழுக்காகி வருவதாக அடிக்கடி புகார் கூறுவார்.. ஒரு நாள், என் அப்பாவுக்கு தலைவலி இருந்தது, அதனால் அவர் தலையில் சிறிது எண்ணெய் தடவினார்.. அதனால், நடந்து செல்லும்போது சுவர்களில் எண்ணெய் கறைகள் உருவாகின..

இதைப் பார்த்து என் மனைவி என்னைப் பார்த்து கத்தினாள்.. நான் என் அப்பாவைக் கத்தினேன், அவரிடம் முரட்டுத்தனமாகப் பேசினேன், நடக்கும்போது சுவர்களைத் தொடாதே என்று அறிவுறுத்தினேன்.. அவர் காயமடைந்ததாகத் தோன்றியது.. என் நடத்தையைப் பார்த்து நானும் வெட்கப்பட்டேன், ஆனால் அவரிடம் எதுவும் சொல்லவில்லை..

என் அப்பா நடந்து செல்லும்போது சுவரைப் பிடிப்பதை நிறுத்தினார்.. ஒரு நாள் அவர் சமநிலையை இழந்து கீழே விழுந்து இடுப்பு எலும்பு உடைந்து போனார்.. இடுப்பு அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர் படுக்கையில் விழுந்து சிறிது நேரத்தில் எங்களை விட்டு பிரிந்து சென்றார்..

என் இதயத்தில் மிகுந்த குற்ற உணர்ச்சியை உணர்ந்தேன். அவருடைய வெளிப்பாடுகளை ஒருபோதும் மறக்கவும், சிறிது நேரத்திலேயே அவரது மறைவை மன்னிக்கவும் முடியவில்லை..

சில நாட்களுக்குப் பிறகு, எங்கள் வீட்டிற்கு வண்ணம் தீட்ட விரும்பினோம்.. ஓவியர்கள் வந்தபோது, அவரது தாத்தாவை மிகவும் நேசித்த என் மகன், ஓவியர்கள் என் தந்தையின் கைரேகைகளை சுத்தம் செய்து அந்தப் பகுதிகளை வரைய அனுமதிக்கவில்லை..

ஓவியர்கள் மிகவும் நல்லவர்களாகவும், புதுமையானவர்களாகவும் இருந்தனர்.. அவர்கள் என் தந்தையின் கைரேகைகளை அகற்ற மாட்டோம் என்றும், இந்த அடையாளங்களைச் சுற்றி ஒரு அழகான வட்டத்தை வரைந்து ஒரு தனித்துவமான வடிவமைப்பை உருவாக்குவோம் என்றும் அவருக்கு உறுதியளித்தனர்.. அதன் பிறகு இது தொடர்ந்தது. அந்த அச்சுகள் எங்கள் வீட்டின் ஒரு பகுதியாக மாறியது..

எங்கள் வீட்டிற்கு வருகை தரும் ஒவ்வொருவரும், சுவரில் உள்ள தனித்துவமான வடிவமைப்பைப் பாராட்டினர்.. காலப்போக்கில், நானும் வயதாகி விட்டேன்.. இப்போது நடக்க சுவரின் ஆதரவு எனக்கும் தேவைப்பட்டது. ஒரு நாள் நடக்கும்போது, என் தந்தையிடம் நான் சொன்ன வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொண்டேன், ஆதரவின்றி நடக்க முயற்சித்தேன்..

என் மகன் இதைப் பார்த்தான். உடனே என் அருகில் வந்து, நடந்து செல்லும்போது சுவர்களைத் தாங்கிப் பிடிக்கச் சொன்னான். நான் ஆதரவு இல்லாமல் விழுந்திருப்பேனோ என்று கவலைப்பட்டான். என் மகன் என்னைப் பிடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். என் பேத்தி உடனடியாக முன்னோக்கி வந்து அன்பாக, அவள் தோளில் என் கையை வைக்கச் சொன்னாள். நான் கிட்டத்தட்ட அமைதியாக அழ ஆரம்பித்தேன்.

நான் என் தந்தைக்கு அதையே செய்திருந்தால், அவர் நீண்ட காலம் வாழ்ந்திருப்பார்.. என் பேத்தி என்னை அழைத்துச் சென்று சோபாவில் உட்கார வைத்தாள்.. பின்னர் அவள் தனது ஓவியப் புத்தகத்தை எடுத்து எனக்குக் காட்டினாள்.. அவளுடைய ஆசிரியர் அவள் வரைந்ததைப் பாராட்டி, அவளுடைய சிறந்த கருத்துக்களைக் கூறினார்..

அந்த ஓவியம் சுவர்களில் என் தந்தையின் கைரேகையைக் கொண்டிருந்தது.

அவள் கருத்து - "ஒவ்வொரு குழந்தையும் தங்கள் பெரியவர்களை அதே வழியில் நேசிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்."

நான் என் அறைக்குத் திரும்பி வந்து, என் மறைந்த தந்தையிடம் மன்னிப்பு கேட்டு, அதிகமாக அழுதேன்..

காலப்போக்கில் நாமும் வயதாகிவிடுவோம்.. நம் வீட்டில் பெரியவர்கள் இன்னும் இருந்தால், அவர்களைக் கவனித்துக்கொள்வோம். நம் குழந்தைகளுக்கும் நம் முன்மாதிரியாக அதையே செய்யக் கற்றுக் கொடுப்போம்.

(ஒரு அழகான செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)

இந்தக் கதை என் இதயத்தைத் தொட்டது. மேலும், வயதாகி வரும் என் நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் பகிர்ந்து கொள்வதாக உணர்ந்தேன்.

மிகவும் நெகிழ்ச்சியானது.. நம்மில் பெரும்பாலோர் எப்போதாவது நம் வயதான பெற்றோருடன் இதே போன்ற தவறுகளைச் செய்திருக்கலாம்...

வாழ்வித்து வாழ்வோம்...





# ஆண்களுக்கு தொல்லை தரும் புராஸ்டேட் சுரப்பி வீக்கம்

பத்மஸ்ரீ கொங்குமாமணிடாக்டர் வி.எஸ். நடராஜன்
முதியோர் நல மருத்துவர், சென்னை

ஆண்களுக்கு வயதாகும்போது அடிக்கடி சிறுநீர் வருவதும், அதைச் சில சமயங்களில் கட்டுப்படுத்த முடியாமல் போவதும் உண்டு. உடலளவிலும், மனதளவிலும் துன்புறுத்தும் இத்தொல்லையைப் பற்றிச் சற்று விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

வயது ஆக ஆகப் பகலில் சிறுநீர் செல்வதும் குறைந்து, இரவில் அதிகமாகும். பகலில் ஏழு முறைக்கு மேலும் இரவில் இரண்டு முறைக்கு மேலும் சிறுநீர் கழித்தால் அது வழக்கத்தைவிட அதிகமாகும். ஆனால் இது, குடிக்கும் நீரின் அளவு, தட்பவெப்ப நிலை மற்றும் மனநிலையைப் பொறுத்து மாறுபடலாம். ஆனால் அடிக்கடி சிறுநீர் சென்றாலும் ஒருநாளில் செல்லும் சிறுநீரின் மொத்த அளவு அதிகரிக்காது.

**அடிக்கடி சிறுநீர் வருவதற்கான காரணங்கள்**

- முதுமை வயது ஆக ஆக அடிக்கடிச் சிறுநீர் கழிக்க வேண்டியிருக்கும்.
- அளவுக்கு அதிகமாகத் தண்ணீர், பானங்கள் (டீ, காபி) மற்றும் மது அருந்த்துதல்.
- நீர் மாத்திரை, ரத்த அழுத்த மாத்திரை, மூட்டு வலிக்குக் கொடுக்கும் மாத்திரை.
- இதயம் பலவீனமடைதல்.
- தூக்கமின்மை.
- புராஸ்டேட் சுரப்பி வீக்கம்.
- சிறுநீர் தாரையில் பூச்சித்தொல்லை.
- நீரிழிவு மற்றும் சிறுநீரகம் செயலிழத்தல்.
- மலம் இறுகி அடைப்பு ஏற்படுதல்.
- சிறுநீர்ப்பையில் கல் மற்றும் கட்டி.
- பக்கவாதம் போன்ற நரம்பு வியாதிகள்.

**புராஸ்டேட் என்றால் என்ன ?**

புராஸ்டேட் ஆண்களுக்கு மட்டுமே உள்ள உறுப்பாகும். இச்சதைப் பகுதியின் செயல்பாடு என்னவென்றால், இதிலிருந்து சுரக்கும் திரவம் விதின்ந் முக்கியப் பங்காகும். இச்சதைப் பகுதி நீர்ப்பை வாய்ப் பகுதியில் அமைந்திருக்கும்.

**புராஸ்டேட் சதை வளர்ச்சி அடையுமா?**

ஆம், ஆண்களுக்கு 45 50 வயது தாண்டும் பொழுது ஏற்படும் ஹார்மோன் மாற்றத்தினால் வளர்ச்சி அடையும்.

**புராஸ்டேட் வளர்ச்சியினால் என்ன பாதிப்பு**

ஏற்படும்?

புராஸ்டேட் வளர்ச்சி ஏற்படுவதால் மட்டுமே பாதிப்பு ஏற்படும் என்ற கூறமுடியாது. புராஸ்டேட் வளர்ச்சி அடைந்தும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் பல ஆண்கள் வாழ்ந்து வருகின்றனர். அதற்கு நேர்மாறாக புராஸ்டேட் வளர்ச்சி அடையாத பொழுதும் அதனால் சிறுநீர் கழீப்பதில் பாதிப்பு ஏற்படலாம்.

**புராஸ்டேட் வளர்ச்சியினால் ஏற்படும் தொல்லைகள்**

- கழிவறைக்குப் போய் நின்றவுடன் சிறுநீர் கழிப்பதில் சிரமம்.
- வேகம் குறைதல்.
- விட்டுவிட்டுச் சிறுநீர் கழிப்பது.
- சிறுநீர் கழித்தபின் முழு திருப்பதியின்மை.
- முக்கி சிறுநீர் கழித்தல்.
- இரவில் அடிக்கடி சிறுநீர் கழிப்பது.
- அடக்க முடியாமல் சிறுநீர் கழிப்பது.
- அடிக்கடி சிறுநீர் தொற்று ஏற்படுவது.
- சிறுநீரிலிருந்து ரத்தம் கசிவது.
- சிறுநீர் பையில் கல் உருவாக்குவது.
- சிறுநீரையே கழிக்க முடியாமல் போவது.
- சிலருக்கு அடைப்பினால் சிறுநீர் இயக்கம் குறையலாம்.

**புராஸ்டேட் வீக்கத்திற்குத் தேவைப்படும் பரிசோதனைகள்**

- டாக்டர்கள், நோயாளியின் ஆசனவாயில் ஒரு விரலை நுழைத்துப் பரிசோதனை செய்து புராஸ்டேட் வீக்கத்தை ஓரளவிற்குச் சரியாகக் கண்டறிய முடியும்.
- பி.எஸ்.ஏ. எனும் ரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும். ரத்தத்தில் உள்ள பி.எஸ்.ஏ. பரிசோதனை மிகவும் முக்கியம்.
- புராஸ்டேட் சுரப்பியின் அளவு அதிகமாகும் போது பி.எஸ்.ஏ.வும் அதிகமாகிறது. பி.எஸ்.ஏ.வின் சரியான அளவு 0  4.00 ng / ml (இது வயதிற்கு ஏற்றவாறு சற்று மாறுபடக்கூடும்). புராஸ்டேட் புற்றுநோயில் பி.எஸ்.ஏ.யின் அளவு மிக அதிகமாக இருக்கும். அறுபது வயதைக் கடந்தவர்கள் ஆண்டிற்கு ஒருமுறை பி.எஸ்.ஏ பரிசோதனை செய்துகொள்வது நல்லது. பி.எஸ்.ஏ.யின் அளவு புராஸ்டேட் வீக்கத்தினாலும் மற்றும் அதில் ஏற்படும் புற்றுநோயினாலும் ரத்தத்தில் அதிகரிக்கலாம். பி.எஸ்.ஏ. அளவை வைத்து புராஸ்டேட் புற்றுநோய் வளர்கிறதா, பரவுகிறதா, சிகிச்சைக்குப் பயனளிக்கிறதா என்பதை அறியலாம்.
- நீர் வேகப் பரிசோதனை (Uroflowmetry) இதன் மூலம் எந்த வேகத்தில் சிறுநீர் செல்கிறது, மேலும் சிறுநீரைக் கழிக்க எவ்வளவு நேரம் ஆகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.




- முழு வயிறு ஸ்கேன் டெஸ்ட் (புராஸ்டேட் அளவு அறிதல், நீர்ப்பையில் தேக்கம், நீர்ப்பையில் கற்கள் போன்றவற்றைக் கண்டறியலாம்.
- பயாப்சி புராஸ்டேட்டிலிருந்து ஒரு சிற கட்டியை எடுத்துப் பரிசோதித்தல்.

**புராஸ்டேட் வீக்கத்திற்குச் சிகிச்சை முறைகள்**

பல ஆண்டுகளாக புராஸ்டேட்டிற்கு அருமையான மருந்துகள் உள்ளன.

புராஸ்டேட் சதைப் பகுதியினால் ஏற்படும் அடைப்பை விரிவடைய வைப்பதற்கும், புராஸ்டேட் சதையையே சுருக்குவதற்கும் மருந்துகள் உள்ளன. இதைத் தாண்டி அறுவை சிகிச்சை மூலமாகவும் அடைப்பை நீக்கலாம். இச்சிகிச்சை முறை உள்நோக்கிக் கருவியினால் செய்யப்படும். அதன் மூலம் புராஸ்டேட்டால் ஏற்பட்ட சதை அடைப்பை நீக்கலாம். இது ஒரு தழும்பில்லாச் சிகிச்சை முறையாகும் (TURP).

**யாருக்கு புராஸ்டேட் பரிசோதனை அவசியம்? ஏன்?**

45  50 வயதிற்கு மேல் உள்ள ஆண்கள் அனைவரும் வருடத்திற்கு ஒருமுறை பரிசோதனை செய்துகொள்வது அவசியம். ஏனென்றால் சிலர் புராஸ்டேட்டால் ஏற்படும் பாதிப்பை அறியாமலேயே இருக்கலாம். சிலருக்கு புராஸ்டேட் வளர்ச்சி புற்றுநோயாகக்கூட இருக்கலாம்.

வயதான காலத்தில் அடிக்கடி சிறுநீர் செல்வதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தக்க சிகிச்சை பெற்று தொல்லையின்றி வாழலாம்.

# ஈரோட்டில் முதியோருக்கான சிறப்பு மருத்துவ முகாம்



ஈரோட்டில் உள்ள வேளாளார் அறக்கட்டளை சேவை மருத்துவமனையில், டாக்டர் வி.எஸ். நடராஜன் அறக்கட்டளையின் “முதியோர் நல சிறப்பு மையத்தை”, 06 03 2019 ஆம் ஆண்டு முதியோர் நல மருத்துவர் பத்மஸ்ரீ வி,எஸ். நடராஜன் அவர்கள் திறந்து வைத்தார்.

முதியோர் நல மருத்துவர் மாதம் ஒருமுறை இங்கு சிறப்பு ஆலோசனை வழங்கி வருகிறார். இந்நாள் வரை முதியோர் சிறப்பு மருத்துவ ஆலோசனை பெற்று, சுமார் 2520 முதியோர்கள் நலம் பெற்றார்கள்.

சிறப்பு மருத்துவ ஆலோசனையைத் தவிர நிமோனியா தடுப்பூசி மற்றும் ஃப்ளு தடுப்பூசி குறைந்த செலவில் சுமார் 650 பேருக்கு போடப்பட்டுள்ளது. ஈரோடு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் இந்த மருத்துவமனை முதியோருக்கான தடுப்பூசியைப் பற்றி ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

இந்த மருத்துவமனையில் 5/03/2023 ஆம் ஆண்டு “மாபெரும் முதியோர் நல மருத்துவ முகாம்” ஒன்று நடைபெற்றது. இதில் 10 முதியோர் நல மருத்துவர்கள் பங்கேற்றார்கள். சுமார் 200 முதியோர்கள் பயன் பெற்றார்கள். முதியோர் நல மருத்துவர் பத்மஸ்ரீ வி. எஸ்.நடராஜன் அவர்கள் தலைமையில் 1-03-2025 அன்று மூன்று முதியோர் நல மருத்துவர்கள் பங்குபெற்ற மருத்துவ முகாமில் 76 முதியோர்கள் பயனடைந்தார்கள். இம்முகாமில் கலந்து கொண்ட சிலருக்கு குறைந்த கட்டணத்தில் தடுப்பூசியும் போடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல அறக்கட்டளையின் “முதியோர் நல சிறப்பு” மையத்தின் மூலம் சென்னையைத் தவிர, ஈரோட்டிலும் அறக்கட்டளை தனது சேவையை செய்து வருகிறது.

முதியோர் நல சிறப்பு மையம் சிறப்பாக செயல்பட பெரும் துணையாக இருந்து வரும் வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.வி.சந்திரசேகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




## தன்னம்பிக்கை சிந்தனை

சூழ்நிலையை மாற்ற முடியாத போது மனநிலையை மாற்ற வேண்டும்! சூழ்நிலையில் கரைந்து போவதற்கு அல்ல! கடந்து போவதற்கு!!

எப்பொழுதும் கவனமாகப் பேசவேண்டும் ஏனென்றால் எழுதியதைக்கூட திருத்தி எழுத முடியும். பேசியதை...???

**-சிந்தனைக் கவிஞர் கவிதாசன்**



# நொய்யல் வெளி நாகரிகம்

சங்க இலக்கியத் தொகை நூல்கள் மொத்தம் எட்டு. அதில் ஒன்று பதிற்றுப்பத்து. சேர அரசர்கள் பத்துப் பேரைப் பற்றி பத்துப் புலவர்கள் பாடியது பதிற்றுப்பத்து. ஈரோடு மாவட்டத்தில் நொய்யலாற்றின் வடகரையில் சென்னி மலை அருகில் உள்ளது கொடுமணல் கிராமம். சுமார் 250 குடும்பங்களுக்குக் குறைவாகவே வாழும் இக்கிராமம் சங்க காலத்தில் 'கொடுமணம்' என்று அழைக்கப்பட்டது. பதிற்றுப்பத்தில் இதற்கான சான்று உண்டு.

மழைபெய்யும் போதும், ஏரோட்டும் போதும், கிழங்கு தோண்டும் போதும் கொடுமணல் பகுதியில் மணிக்கற்கள் கிடைத்திருக்கின்றன. ஆடு மாடுகள் காடுகளில் மேய்கிற போது கால் குளம்புகளில் மணிக்கற்கள் சிக்கிக் கிடந்தன. மழை பெய்கிற போது மண் அரிப்பு ஏற்பட்டால் அப்போதும் மணிக்கற்கள் கிடைத்தன. இந்தச் செய்திகள் அனைத்தும் பதிற்றுப்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள இந்தச் செய்திகள் வெறும் கற்பனையில்லை என்பதை நிறுவிவிட்டனர் வரலாற்று ஆய்வாளர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நொய்யல் நதிக்கரையில் அமைந்திருக்கும் கொடு மணல், கத்தாங்கண்ணி, படியூர் போன்ற கிராமங்கள் சர்வதேச அளவில் பல்வேறு வணிகச் சிறப்புகளைப் பெற்றிருந்தன என்பதையும் அகழ்வாராய்ச்சியின் மூலம் வரலாற்றியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். கிரேக்கப் பயணி 'பிளினி' என்பவர் படியூர் பற்றி தனது பயணக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார்.

பூமியில் புதையுண்டு மறைந்து கிடக்கின்ற மனித இனத்தோடு தொடர்புடைய பொருள்களையும், அக்காலத்து மனிதர்கள் பயன்படுத்தி விட்டுச் சென்றிருக்கிற பொருள்களையும் அகழ்ந்தெடுத்து ஆய்வு செய்வதே தொல்லியல் அகழாய்வுகள் என்று அழைக்கப்படுகிறது. சிந்து சமவெளி நாகரிகம் குறித்த சிறப்புகளும் அக்கால கட்டத்தில் அங்கு வாழ்ந்த மனிதர்களின் நாகரிகம் பற்றிய சிறப்புகளும் அகழாய்வுகள் மூலம்தான் உலகிற்கு தெரிய வந்தது.

'கரிப்பகுப்பாய்வு' மூலம் அறிவியல் முறைப்படி தொல்லியல் அகழாய்வு நடந்த இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு, அங்கு வாழ்ந்த மனித சமூகத்தின் காலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்முறையில் இந்தியாவில் 200-க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் முக்கிய பதினான்கு அகழாய்வுகளில் ஒன்றாக 'கொடுமணல் ஆய்வு திகழ்கிறது. பலவகையில் தனித்தன்மையோடு சிறப்பிடம் பெறுகிறது.

கொடுமணல் பகுதிக்கும் ரோமானியர்களுக்குமிடையே, வணிகத் தொடர்பு இருந்ததற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. சங்க காலத்திலேயே தமிழ்நாட்டோடு கிரேக்கர்கள், ரோமானி யர்கள், எகிப்தியர், பாரசீகர், அரேபியர் ஆகியோருக்கு வணிகத் தொடர்பு இருந்திருப்பினும், பெரும்பாலும் ரோமானியரே அதிகமாகத் தமிழகம் வந்திருப்பதை கொடுமணல் ஆய்வு வெளிப்படுத்துகிறது.



கொடுமணல் அகழாய்வில் ரோமானியக் காசுகள், வேலைப் பாடுகள் மிகுந்த ரோமானிய மதுக்குடங்கள், அழகுமிகு ரோமானிய சுடுமண் பொம்மைகள், ரோமானியர்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடிய அரிய பானை வகைகள்



கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தேக்கு, அகில், சந்தனம், மிளகு, லவங்கம், ஏலம் போன்ற மலையில் கிடைக்கும் பொருள்களை வாங்குவதற்காக மேற்குக் கடற்கரைக்கு வந்த ரோமானியர்கள் பாலக்காட்டுக் கணவாய், போளுவாம்பட்டி கணவாய் ஆகியவற்றின் வழியாக நொய்யல் கரைக்கு வந்தனர்.

கொடுமணல் மக்கள் உபயோகித்த பொருள்கள் பயன்படுத்திய கருவிகள் ஆகியவை ஏராளமாக அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன. உலகெங்கும் கிடைக்கிற ரோமானிய நாணயங்களில் 80% நொய்யல் கரையில் மட்டுமே கிடைக்கிறது. புழக்கத்தில் விடப்படாத புதிய நாணயங்களே இங்கு குவியல் குவியலாகக் கிடைத்துள்ளன.

“தமிழகத்திற்குச் சென்று கல்லையும் மலைப் பொருள்களையும் வாங்கி வாங்கி ரோமானியர்கள் தங்கத்தை இழக்கிறீர்கள். இதன் காரணத்தாலேயே ரோமாபுரி தங்கமின்றி வறுமைக்கு ஆட்பட்டுவிடும்” என்று கிரேக்க மன்னன் நீரோ கூறியிருக்கிறார்.

நொய்யல் கரைவெளியில் அக்காலத்து இரும்புக் கசடு. இரும்புக் கருவிகள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீட்டு உபயோக இரும்புப் பொருள்கள், விவசாயக் கருவிகளுக்கான இரும்புப் பொருள்கள். வேட்டைக்கான இரும்புப் பொருள்கள் என பலவகையான பழங்கால இரும்புப் பொருள்கள் ஆய்வில் கிடைத்துள்ளன.

எகிப்து பிரமிடுகளில் காணப்படும் இரும்பும், மாவீரன் அலெக் ஸாண்டருக்கு புருஷோத்தமன் அன்பளிப்பாகக் கொடுத்த முப்பத்தெட்டு மணங்கு இரும்பும் கொங்கு நாட்டு இரும்பு என்று சர் ஜே. வில்கின்சன், ஜே.எம். ஹீத் ஆகிய ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். இரும்பைக் காய்ச்சும் கருவிகளும் எஃகு உருவாக்கும் பாத்திரங்களும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மணிக்கற்கள் இப்பகுதியில் இயற்கையாக விளைபவை. பச்சைக்கல், கடல் நீலம், வெண்படிகம் ஆகிய மூன்று ரக மணிக்கற்கள் கொடுமணல் பகுதியில் ஏராளமாகக் கிடைத்தன. இன்றும் கிடைக்கின்றன. ஆப்கானி ஸ்தானம், ராஜஸ்தான் - ஜெய்ப்பூர், இலங்கை ஆகிய 3 பகுதிகளில் கிடைக்கும் வித்தியாசமான அரிய மணிக்கற்களை இப்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் இறக்குமதி செய்துள்ளனர். அந்தக் கற்களையும் இங்கே கிடைத்த கற்களையும் கொண்டு பாசியாகக் கோப்பது நகைகளில் பதிப்பது போன்ற நுணுக்கமான தொழில் புரிந்தும் வந்தனர். இப்பகுதி வாழ் தமிழர்கள் அழகிய வேலைப்பாடுகள் மிக்க ஆபரணங்கள் செய்வதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

இந்தியா முழுவதும் கிடைத்த எழுத்துப் பொறித்த பானை ஓடுகளை ஒட்டு மொத்தமாகக் கூட்டினால் கிடைக்கும் அளவைவிட, நொய்யல் கரைவெளியில் கிடைத்த ஓடுகளின் அளவு அதிகம். பானை மீது காணப்படும் வேலைப்பாடுகள் கண்ணைக் கவருவதாக உள்ளன. கறுப்பு, சிவப்பு, கறுப்பு சிவப்பு என வண்ணங்கள் ஏற்றப்பட்ட ஓடுகளையும் காணமுடிகிறது.

ஹரப்பா - மொஹன்ஜதாரோ பகுதிகள் நாட்டு விடுதலைக்குப் பிறகு மிகச்சிறு பகுதியைத் தவிர மீதமுள்ளவை பாகிஸ்தான் பகுதிக்குச் சென்றுவிட்டது. இந்திய நாடளவில் இப்போதுள்ள வெற்றிகரமாக நடைபெற்ற அகழ்வாய்வுப் பணிகளில் தலைசிறந்த இடத்தை வகிக்கிறது. ‘கொடுமணல் அகழ்வாய்வு’. ‘சங்ககாலம்’ என்ற ஒன்று இருந்த தென்பதை மெய்ப்பிக்கவும், சங்கத்தின் காலத்தை நிர்ணயிக்கவும், சங்க இலக்கியங்களில் வர்ணிக்கப் பட்டுள்ள ஏராளமான பொருள்கள் உண்மையில் இருந்தன என்பதைப் பறைசாற்றுவதற்கும் கொடுமணல் அகழ்வாய்வு பயன்படுகிறது.

இந்த ஆய்வுக்கு அடித்தளமிடும் வகையில் கொடுமணலை அடையாளம் காட்டிய கொங்குநாட்டு ஆய்வாளர் புலவர் செ. இராசு. இந்த அகழ்வாய்வில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இந்த உன்னத மான வரலாற்றுச் செல்வத்தை உலகிற்கு உணர்த்திய பேராசிரியர்கள் எ. சுப்பராயலு, கா. ராஜன் ஆகியோர் பணி என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஐம்பதில் ஒரு பாகம் மட்டும்தான் இதுவரை ஆய்வு நடந்து முடிந்துள்ளது. நொய்யல் கரைவெளி முழுமையாக ஆய்ந்தறியப்பட்டால் தமிழர் நாகரிகம் இன்னும் வலுவாக உலகிற்கு உணர்த்தப்பெறும்.



**நன்றி: த.ஸ்டாலின் குணசேகரன்.**

**தலைவர், மக்கள் சிந்தனை பேரவை**




## நல் வாழ்த்துக்கள்

**கொங்கு** நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம். கொங்கு வேளாளக் கவுண்டர் இனத்தில் இருந்து அரூர் இராமியம்பட்டி (தர்மபுரி மாவட்டம்)

தெய்வ திரு.**குமார்** அவர்களின் புதல்வி

செல்வி.**கு.சௌமியா** அவர்கள்

**TNPSC Group - I** தேர்வில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து துணை ஆட்சியராக தேர்வாகி உள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கொங்கு நாடு அறக்கட்டளையின் குடும்ப சந்திப்பு விழாக் காட்சிகள்!














முத்துவீரப்ப நாயக்கர் சத்திரம்
தெப்பக்குளம்

## தெரிந்த பெயர் தெரியாத செய்தி!

# முத்து வீரப்ப நாயக்கர் சத்திரம் வீரப்பன் சத்திரம்

(நன்றி : கொங்கு மாமணி புலவர் செ.இராசு)

ஈரோட்டிலிருந்து சித்தோடு செல்லும் வழியில் தனியாக விளங்கிய ஊர் வீரப்பன் சத்திரம். இப்போது ஈரோட்டுடன் இணைந்துவிட்டது. மதுரை நாயக்கர் காலத்தில் இங்கு ஒரு பெரிய சத்திரமும். தெப்பக்குளமும், நந்தவனங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அந்தச் சத்திரத்திற்கு முத்துவீரப்ப நாயக்கர் சத்திரம் என்பது பெயர். மதுரை நாயக்கர் மரபில் மூன்று அரசர்கள் முத்துவீரப்ப நாயக்கர் என்ற பெயருடன் ஆட்சிபுரிந்தனர்.

முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் 1609-1623
இரண்டாம் முத்து வீரப்பநாயக்கர் 1659
மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் 1682-1689

வரலாற்றின்படி முதலிருவரும் ஈரோடு அருகில் முத்துவீரப்ப நாயக்கர் சத்திரம் அமைக்க வாய்ப்பில்லை.

இன்றைய வீரப்பன் சத்திரத்தில் சத்திரம் முதலியவைகளை அமைத்து வழிப்போக்கர் தங்கவும். தண்ணீர்ப்பந்தல் அமைத்து எப்பொழுதும் உப்பு ஊறுகாய் நீராகாரம் வழங்கவும் ஏற்பாடு செய்தவர் மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கரே ஆவார். அவர் அமைத்த முத்து வீரப்ப நாயக்கர் சத்திரம் தான் இன்று வீரப்பன் சத்திரம் என்ற பெயரில் வழங்கி வருகிறது. மிகப்பெரிய தெப்பக்குளம் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. தெப்பக்குளத்தின் வட பகுதியில் தண்ணீர் இறைத்ததற்கான அமைப்பு இன்றும் உள்ளது.

நந்நவனம் இருந்த அடையாளம். பெயரும் இன்றும் உள்ளது. இச்சத்திரத்தின் அருகில் தான் ‘சந்திரமதிமுதலியார் மடம் இருந்திருக்க வேண்டும்.



## வருந்துகிறோம்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர் எண்: 3977 திரு அமைப்புஆறுமுகம் அவர்களின் தாயார் **பொ.நாச்சம்மாள்** அவர்கள் 24.3.2025 அன்று இயற்கை எய்தினார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

திண்டுக்கல் மாவட்டம்
ஒட்டன்சத்திரம் தாலுகா
முத்து நாயக்கன்பட்டி
கிராமம்

# வாழ்த்துகிறோம்




சங்க செயற்குழு உறுப்பினர் திரு. இசை அழகன் அவர்களின் புதல்வி செல்வி. வி.இ.ரபியா– செல்வன். இ.ராகுல் திருமண வரவற்பு விழா 15.03.2025 அன்று சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பின ருமான திரு. ஈ.ஆர். ஈசுவரன் அவர்களும், கொங்கு சொந்தங்களும் வாழ்த்திய காட்சி!

---



## வாழ்த்துகிறோம்

நமது சங்கத் தலைவரின் தம்பியும், சங்க உறுப்பினருமான Er.அழகன் கருப்பண்ணன் - திருமதி.பத்மா தேவி இணையரின் மகன் Er.ஆதவன், Er.சிவக்குமார் - Dr.மஞ்சுளவல்லி இணையரின் மகள் Dr.நித்திலா ஆகியோரின் திருமணம் 11.04.2025 அன்று கோவையில் சிறப்பாக நடைபெற்றது.



# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

## பெ.தூரன்

[1]

## லீவு வந்தது!




“மாமா, வேண்டாம்” என்று வாய்விட்டுக் கத்திவிட்டான் சுந்தரம். இவன் கோடை விடுமுறையின் போது தன் மாமா வீட்டுக்கு வருவது வழக்கம். மதுரையில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறான்.

“ஆமாப்பா, பாட்டி வீடே வேண்டாம்” என்று சிணுங்கினாள் தங்கமணியின் தங்கை கண்ணகி. ஆறாம் வகுப்பில் படிக்கும் கண்ணகிக்கும் இப்பொழுது விடுமுறை.

தந்தை சிரித்துக் கொண்டே “ஏன் வேண்டாம் என்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“மாமா, உண்மையைச் சொல்லி விடுகிறேன். போன தடவை கோடை விடுமுறைக்குப் போனோமே அந்தப் பாட்டி படுபோர்” என்றான் சுந்தரம். “ஆமாப்பா, எங்களை எங்குமே பாட்டி தனியாகப் போக விடவே இல்லை. நாங்கள் என்ன சின்னக் குழந்தைகளா?” என்று தங்கமணி இடையிலே சொன்னான். தங்கமணிதான் எல்லாருக்கும் பெரியவன்; பத்தாம் வகுப்பில் படிக்கிறான்.

தந்தைக்கு விஷயம் விளங்கிவிட்டது, அவர், “அந்தப் பாட்டியைப் போல அல்ல இந்தப்பாட்டி. நீங்கள் கை கால்களை முறித்துக்கொண்டு வந்தாலும், ‘சின்னவயசிலே இப்படித்தான் இருக்கும்’ என்று சொல்லிவிட்டுக் கவலைப்பட மாட்டாள். ஆனால் வேண்டிய சிகிச்சையை உடனே கவனிப்பாள். இந்தப் பாட்டியின் போக்கே தனியாக இருக்கும்”. என்று அவர்களுக்கு உற்சாகம் வரும்படி பேசினார்.

“அப்பா, சங்ககிரியிலே என்னவெல்லாம் பார்க்கலாம்?” என்று ஆவலோடு கேட்டாள் கண்ணகி.

“அங்கே சங்ககிரி என்ற ஒரு மலை இருக்கிறது. அதிலே திப்புசுல்தான் கட்டிய கோட்டைச் சுவர்களும் உண்டு, அங்கே பல அதிசயங்களைக் காணலாம்” என்ற பதிலைக் கேட்டதும் மூவருக்கும் குஷி பிறந்து விட்டது.

“அப்பா, அங்கே கோட்டைக்குள் போக விடுவார்களா?” இது கண்ணகி.



“திப்புசுல்தான் கட்டிய கோட்டை என்றால் அங்கே சண்டை நடந்ததா?”-- இது தங்கமணி.

“அங்கே பீரங்கிகளெல்லாம் உண்டா?” --இது சுந்தரம்.

இப்படி மூவரும் பதிலுக்குக் காத்திராமல் ஒரே மூச்சில் பேசினார்கள்.

“மூன்று பேரும் ஒரே மூச்சில் கேட்டால் எப்படிப் பதில் சொல்வது? எல்லாம் அங்கே போய்த் தெரிந்து கொள்ளுங்கள்” என்று சுருக்கமாகப் பதில் கிடைத்தது. இவர்கள் இவ்வளவு உற்சாகமாகப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜின்கா மேஜைமேல் தாவி நின்று ஜிங் ஜிங் என்று குதித்தது. அந்தக் குரங்கு அப்படிக் குதிப்பதால் தான் அதற்கு ஜின்கா என்ற பெயர் ஏற்பட்டது. தங்கமணி செல்லமாக வளர்த்து வருகின்ற குரங்கு அது. எத்தனையோ தீரச் செயல்களை அது புரியவல்லது.

பிறகு வழக்கம்போல தங்கமணியின் தோளில் ஏறி உட்கார்ந்துகொண்டு எல்லாரையும் கூர்ந்து கவனித்தது. தங்கமணி ஜின்காவை மிகுந்த பிரியத்தோடு தட்டிக் கொடுத்தான் அதற்கு அவன் பலவகையான உபயோகமான பயிற்சிகளைச் சொல்லிக் கொடுத்திருந்தான். தங்கமணியின் குறிப்பறிந்து அதன்படி, நடப்பதில் ஜின்கா புகழ்பெற்றிருந்தது.

சங்ககிரிக்கு அடுத்த நாள் நீலகிரி எக்ஸ்பிரசில் போவதாக ஏற்பாடு ஆகியிருந்தது. அதற்கு வேண்டிய பயணச் சீட்டுகளும் முன்னாலே ரிசர்வ் செய்ததோடு சங்ககிரிப் பாட்டிக்கும் தகவல் எழுதிப் பதிலும் கிடைத்திருந்தது.

ஒரு மாதம் சங்ககிரியில் இருப்பதற்கான துணிமணிகளையும், சோப்பு, கண்ணாடி முதலியவற்றையும் எடுத்துப் பெட்டியிலே வைப்பதில் மூவரும் அடுத்த நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தார்கள்.

“கண்ணகி, உன்னுடைய பவுடர் டப்பாவை எடுத்து வைத்தாயா? அதில்லாமல் நீ வெளியே கிளம்ப மாட்டாயே?” என்று கேலியாகக் கேட்டான் சுந்தரம்.

“அதை வைக்க மறந்துவிட்டேன், நல்ல வேளை நீ ஞாபகப்படுத்தினாய்” என்று கூறிவிட்டு பவுடர் டப்பாவை எடுக்க ஓடினாள் கண்ணகி.

அவளையும் முந்திக் கொண்டு ஜின்கா தாவிக் குதித்து அந்த டப்பாவை எடுத்து வந்தது. வந்த அவசரத்தில் அது தடுக்கி விழுந்ததால் பவுடர் ஜின்காவின் முகத்திலும், உடம்பிலும் கொட்டிவிட்டது. பாதி டப்பா காலியாகிவிட்டது.

எல்லாம் ஜின்காவின் முகத்திலும் உடம்பிலும்தான் என்றால் கேட்கவேண்டுமா? அப்பொழுது ஜின்கா விநோதமாகக் காட்சி அளித்தது. அதைக் கண்டு மூவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

[2]

# சங்ககிரிக்குப் பயணம்!



சென்னையிலிருந்து நீலகிரி எக்ஸ்பிரஸ் சரியாக இரவு 8 மணிக்குக் கிளம்புகிறது. மூன்று பேரும் சரியாகக்கூட சாப்பிடவில்லை. “சாப்பிடக்கூட உங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. இப்படிச் சரியாக சாப்பிடாமல் பாட்டி வீட்டில் இருக்கக்கூடாது. அங்கே சமத்தாக இருந்து நல்ல பெயர் வாங்கிவரவேணும்” என்று கண்ணகியின் தாய் அவர்கள் மூன்று பேரிடமும் சொன்னாள்.

“அத்தை, கண்ணகி அழாமல் இருந்தால் போதும். நல்ல பெயர் வாங்கி விடுவோம்” என்றான் சுந்தரம்.

“சரிதாண்டா, கோமாளி, நீ உன்னுடைய கோமாளிப் பேச்சையெல்லாம் பாட்டியிடம் காண்பிக்காமல் இருந்தால் போதும்” என்றாள் கண்ணகி.

கண்ணகியின் தாயார் இவர்கள் பேசுவதை ரசித்துக் கொண்டே தான் தயார் செய்து வைத்திருந்த தேன்குழல், முதலிய பலகாரங்களை ஒரு பெரிய டப்பாவில் போட்டுக் கொண்டிருந்தாள்.

“அத்தை, இந்த சங்ககிரிப் பாட்டிக்குப் பல் உண்டா?” என்று கேட்டாள் சுந்தரம்.

“முறுக்கெல்லாம் உங்களுக்குத்தான். பாட்டியை அந்தப் பலகாரம் பண்ணிக்கொடு, இந்தப் பலகாரம் பண்ணிக்கொடு என்று நீங்கள் தொந்தரவு செய்யக்கூடாது. அதற்காகத் தான் நானே நிறையச் செய்து வைத்திருக்கிறேன்” என்று பேச்சை முடிக்கும் முன்னால் வெளியில் கார் சத்தம் கேட்டது. “மாமா, வந்துவிட்டார். உடனே புறப்பட வேண்டியதுதான்” என்றான் சுந்தரம்.

மூவரும் படுக்கை பெட்டி முதலிய சாமான்களைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். ஜின்கா பலகார டப்பாவை தூக்கிக் கொண்டு ஓடிற்று. தங்கமணி ஜின்காவை விட்டுப் பிரிய மாட்டான் ஆகையால், அதற்கும் பயணச்சீட்டு வாங்கியிருந்தார்கள்.

மூவரும் ஜின்காவுடன் குதூகலமாகப் புறப்பட்டு அதிகாலையில் சங்ககிரியை அடைந்தார்கள். அங்கே அதிக நேரம் நீலகிரி எக்ஸ்பிரஸ் நிற்காதாகையால் வேகமாகச் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ரயிலைவிட்டு இறங்கினார்கள்.

பாட்டி வீட்டிலிருந்து ஒரு வேலையாள் ரயிலடிக்கு வந்து அவர்களைச் சந்தித்தான். மாட்டு வண்டியில் பாட்டி வீட்டுக்குச் சென்றது மூவருக்கும் புதிய அனுபவமாக இருந்தது.

“பெட்ரோல் இல்லை. டயர் இல்லை - கியர் இல்லை - எத்தனை செலவு மிச்சம்” என்று பாட்டுப் பாடத் தொடங்கினான் சுந்தரம்.

அதைக் கவனியாமல், “சுந்தரம் அங்கே பார் - எவ்வளவு பெரிய மலை - அதுதான் சங்ககிரியா?” என்று கூவினாள் கண்ணகி.

அது வரையிலும் அவர்கள் அந்த மலையைக் கவனிக்கவே இல்லை. மூவரும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

“பெரிய சங்கு போல இந்த மலை காட்சி

அளிக்கிறது. அதனால்தான் இதற்குச் சங்ககிரி என்று பெயர் வந்ததோ?" என்று ஆலோசனையோடு கேட்டான் தங்கமணி. "சரி, சரி வந்தவுடன் உனது ஆராய்ச்சியிலே இறங்கிவிட்டாயா? உன்னுடைய ஜின்காவைக் கேட்டுப்பார். குரங்குக்குத்தான் மலையெல்லாம் தெரியும்" என்று சுந்தரம் கேலி செய்தான்.

"நீங்கள் இந்த ஊருக்கு இதுதான் முதல் தடவை வருகிறீர்களா? என்று வேலைக்காரன் வண்டியை ஓட்டிக் கொண்டே கேட்டான்.

"ஆமாம். உனக்கு இந்த மலைக்கு இப்படிப் பெயர் ஏற்பட்டதன் காரணம் தெரியுமா?" என்று தங்கமணி அவனைக் கேட்டான்.

"எனக்கும் தெரியாது. நான் புதிதாக வேலைக்கு வந்திருக்கிறேன்" என்றான் வண்டிக்காரன்.

மெதுவாக வண்டி பாட்டி வீட்டை அடைந்தது. பாட்டி வாசலிலேயே நின்று இவர்களை அன்புடன் வரவேற்றாள்.

தொடரும்....






மெதுவாய் நடப்பவன் எங்கேனும்
இடறி விழுந்து அமர்வானோ ?

மெத்த படித்தோன் ஒருபோதும்
குறை குடம் ஆகான் இப்புவியில்!

முற்றும் துறந்த முனிவருமே
இகபர வாழ்வை விழை வாரோ ?

அலையடி கடலில் நீந்தியவன்
குட்டை நீரில் குளிப்பானோ ?

பனிபடர் கிரி மீதேறி யவன்
குன்றினைக் கண்டு குமைவானோ?

கொதிக்கும் பாலையில் நடந்தானை
கடற்கரை மணலும் தகித்திடுமா. ?

களிரினை எதிர்த்து வேல் எறிந்தோன்
குறு நரி பிடிக்க செல்வானோ ?

பெரும் சிலை வடிக்கும் சிற்பியவன்
அம்மி கொத்த அலைவானோ ?

நான்மறை ஓதும் பண்டிதர்கள்
கையறு நிலைதனை இசைப்பாரோ?

விரும்பார்! விழையார் ! விலகிடுவர்
நீரிழந்த மேகம் வெண்மையுறும்!

"நான்" இழந்த.மனம் செம்மையுறும்
நசை நீக்கிய மனதினராய் நாம் வாழ

வாழ்க்கை செம்மையுறும்
வையகமும் செழித் தோங்கும்!

" வாழி நலம் சூழ!"

**அன்புடன்**
**- கவிஞர் கலாப்ரியன்(பூபதி)**


ERODE PUBLIC SCHOOL
Affiliated to CBSE, New Delhi
Vakkil Thottam, Manickampalayam, Erode - 638 004.
ADMISSION
OPEN NOW
2025 - 2026
ERODE PUBLIC SCHOOL
ERODE PUBLIC SCHOOL
TOMORROW'S INSIDE

# 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் கையேடு




**மேலும் தகவல்களுக்கு இந்த QR-ஐ பயன்படுத்தி அறிந்து கொள்ளலாம்**

## 2.NATIONAL INSTITUTES OF TECHNOLOGY (NIT)

12–ம் வகுப்பு படித்தவர்களுக்கு நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (National Institute of Technology) வாயிலாக பொறியியல் படிப்புகள் வழங்கப்படுகிறது. அதன் விவரம்...

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | Bachelor of Technology (B.Tech.) |
| பொறியியல் பாடப் பிரிவுகள் (Branches in Engineering) | BioTechnology / Chemical / BioMedical / Civil / Computer Science / Electrical and Electronics / Electrical and Telecommunication / Electrical / ElectronicsCommunication /Electronics Instrumentation /Industrial Engineering / Information Technology / Instrumentation / Metallurgical / Mechanical / Mining / Production& Industrial / Textile / Industrial Design / Physics. |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12-ஆம் வகுப்பு (கணிதம், இயற்பியல், வேதியியல்) |
| படிப்பின் கால அளவு | 4 ஆண்டுகள் |
| எழுத வேண்டிய நுழைவு தேர்வு | Joint Entrance Examination |
| இணையதள முகவரி | www.jeemain.nic.in |
| NIT அமைந்துள்ள இடங்கள் | திருச்சிராப்பள்ளி, புதுச்சேரி, குருஷேத்ரா, கொல்கத்தா, டில்லி, அகர்தலா, துர்காபூர், கோவா, போபால், ஜெய்ப்பூர், அலகாபாத், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலந்து, ஜலந்தர், ஜாம்ஷெட்பூர், நாக்பூர், பாட்னா, ராஜ்பூர், ரூர்கேலா, சிக்கிம், சில்சார், ஸ்ரீநகர், சூரத், சூரத்கல், , உத்தரகாண்ட், வாரங்கல், அருணாச்சல பிரதேஷ், ஹமீர்பூர். |
| கல்வியின் பயன்பாடு | M.Tech / MBA போன்ற உயர்கல்வி படிக்கலாம். தனியார் துறையில் வளாக பணியமர்த்தல் வாயிலாக உடனடியாக வேலைவாய்ப்பைப் பெறலாம். அரசு மற்றும் பிரபல தனியார் துறைகளில் பொறியாளர், கண்காணிப்பாளர், தொழில் நுட்ப அலுவலர் போன்ற பணிவாய்ப்புகளை உடனடியாகப் பெறலாம். சுய தொழில் தொடங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

## 3. COURSES IN ANNA UNIVERSITY AND AFFILIATED COLLEGES

12–ம் வகுப்பு படித்தவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகள் வாயிலாக பொறியியல் படிப்புகள் வழங்கப்படுகிறது. அதன்விவரம் பின்வருமாறு ..

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | Bachelor of Engineering (B.E)<br>Bachelor of Technology (B.Tech) |
| பொறியியல் பாடப் பிரிவுகள் (Branches in Engineering) | Aero Nautical / Automobile / Agriculture / Computer Science / Civil / Electronic and Communication / Electronics Instrumentaion / Electrical and Electronics / Geo Informatics / Industrial / Mechanical / Material Science / Mining / Manufacturing / Printing/ Production/ Chemical / Ceramic / Food/ Information / Industrial Bio Techonology / Petro Chemical / Pharmaceutical / Rubber and Plastic / Textile / Information Technology / Mechatronics / Bio-medical / Electronic and Telecommunication / Instrumentation / Marine Engineering / Metallurgical / Petroleum / Robotics and Automation / Fashion Technology. |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12-ஆம் வகுப்பு (கணிதம், இயற்பியல், வேதியியல் ) அல்லது Vocational Group (Engineering). |
| படிப்பின் கால அளவு | 4 ஆண்டுகள் |
| தேர்வு முறை | மதிப்பெண் அடிப்படையில் மாநில கலந்தாய்வு முறை |
| தொடர்புடைய துறை | அண்ணா பல்கலைக்கழகம் |
| இணையதள முகவரி | www.annauniv.edu<br>www.annauniversitycounselling.com www.tndte.ac.in |
| பொறியில் கல்லூரிகளின் எண்ணிக்கை | 1. அண்ணா பல்கலைக்கழகம் - 2 வளாகங்கள் (கிண்டி மற்றும் குரோம்பேட்டை வளாகம்)<br>2. அண்ணா பல்கலைக்கழக வளாக கல்லூரிகள் - 13<br>3. அண்ணா பல்கலைக்கழகம் சார்ந்த அரசு கல்லூரிகள் - 9<br>4. அரசு உதவி பெறும் கல்லூரிகள் - 3<br>5. சுயநிதி கல்லூரிகள் - 537 |
| கல்வியின் பயன்பாடு | M.E / M.Tech / MBA போன்ற உயர்கல்வி படிக்கலாம். தொழிற் பழகுநர் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகளை Board of Apprentice வாயிலாக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பெறலாம். அரசு மற்றும் தனியார் துறைகளில் உதவி பொறியாளர், கண்காணிப்பாளர், தொழில் நுட்ப அலுவலர் போன்ற பணிவாய்ப்புகளை பெறலாம். சுய தொழில் தொடங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

மேற்கண்ட விவரங்களை கீழ்க்கண்ட இணையதளத்தில் காணலாம்.

பொறியியல் பட்டம் தேர்ச்சி பெற்றவர்கள் தொழில் பழகுநர் பயிற்சி பெற Board of Apprenticeship-ன் www.boatsr-apprentice.tn.nic.in இணையதளம் வழியாக பதிவு செய்தல் வேண்டும். அதன் முகவரி பின்வருமாறு, Board of Apprenticeship No. 4th Cross Street, CIT. Campus, Tharamani, Chennai - 13.

## 4. BIRLA INSTITUTE OF TECHNOLOGY AND SCIENCE (BITS)

12–ம் வகுப்பு படித்தவர்களுக்கு **BITS** கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் பொறியியல் படிப்புகள் பற்றிய விவரம் பின்வருமாறு . . .

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | B.E., (Hons) |
| பொறியியல் பாடப் பிரிவுகள் (Branches in Engineering) | Chemical / Civil / Computer Science / Electrical and Electronics / Electronics and Instrumentation / Manufacturing |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12ஆம் வகுப்பு (கணிதம், இயற்பியல், வேதியியல் ) |
| படிப்பின் கால அளவு | 4 ஆண்டுகள் |
| தேர்வு முறை | BITSAT Examination |
| இணையதள முகவரி | www.bits-pilani.ac.in |
| கல்லூரிகளின் விவரம் | **Bits Pilani, Goa, Hyderabad and Dubai** |
| கல்வியின் பயன்பாடு | M.E / MBA போன்ற உயர் கல்வி பயிலலாம். தனியார் துறையில் வளாக பணியமர்த்தல் வாயிலாக உடனடியாக வேலைவாய்ப்பை பெறலாம். அரசு மற்றும் தனியார் துறைகளில் உதவி பொறியாளர், கண்காணிப்பாளர், தொழில் நுட்ப அலுவலர் போன்ற பணிவாய்ப்புகளை பெறலாம். சுய தொழில் தொடங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

## 5. INDIAN INSTITUTE OF SPACE SCIENCE AND TECHNOLOGY

12–ம் வகுப்பு படித்தவர்களுக்கு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்பேஸ் சயின்ஸ் மற்றும் டெக்னாலஜி கல்லூரியில் அளிக்கப்படும் படிப்புகள் பற்றிய விவரங்கள்.

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | • B.Tech. Aero Space Engineering<br>• B.Tech. Avionics<br>• 5 Year Dual Degree (B.Tech + M.S / M.Tech).<br>**B.Tech Engineering Physics and M.S / M.Tech in any one of the following**<br>• M.S. (Astronomy & Astrophysics)<br>• M.S (Earth System Science)<br>• M.S (Solid State Physics)<br>• M.Tech (Optical Engineering). |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12-ஆம் வகுப்பு கணிதம், இயற்பியல், வேதியியல் |
| படிப்பின் கால அளவு | B.Tech - 4 ஆண்டுகள்<br>Dual Degree (B.Tech + M.S / M.Tech) – 5 ஆண்டுகள் |
| எழுத வேண்டிய நுழைவுத் தேர்வு | IIST (Indian Institute of Space Science and Technology)<br>www.iist.ac.in |
| தொடர்புடைய துறை | Department of Space, Government of India |
| கல்லூரியின் விவரம் | IIST (Indian Institute of Space Science and Technology)<br>Valiamala, Thiruvanathapuram, Kerala. |
| கல்வியின் பயன்பாடு | M.Tech / MBA போன்ற உயர் கல்வி பயிலலாம். தனியார் துறையில் வளாக பணியமைர்த்தல் வாயிலாக உடனடியாக வேலைவாய்ப்பை பெறலாம். அரசு மற்றும் பிரபல தனியார் துறைகளில் பொறியாளர், தொழில் நுட்ப அலுவலர் போன்ற பணிவாய்ப்புகளை உடனடியாக பெறலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

# தொலைதூர கல்வி மூலம் பொறியியல் படிப்புகள்

### 7. ASSOCIATE MEMBER OF INSTITUTION OF ENGINEERS (AMIE)
### (AMIE Equvalent to B.E/ B.Tech Degree)

12–ம் வகுப்பு படித்தவர்கள் தொலை துார கல்வி மூலம் பொறியியல் படிப்பு (AMIE) படிக்கலாம். **AMIE** கல்வித் தகுதி பொறியியல் பட்டப் படிப்பிற்கு இணையானதாகும். அதன் விவரம் பின்வருமாறு. . . .

| படிப்பின் விவரம் | **AMIE Equvalent to B.E/ B.Tech Degree in** |
|---|---|
| பொறியியல் பாட பிரிவுகள் | 1. Chemical Engineering<br>2. Civil Engineering<br>3. Computer Science and Engineering<br>4. Electrical Engineering<br>5. Electronic & Communication Engineering<br>6. Mechanical Engineering<br>7. Materials and Metallurgical Engineering<br>8. Mining Engineering<br>9. Production Engineering<br>10. Textile Engineering. |

| | | | | |
|---|---|---|---|---|
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12–ஆம் வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல் (அல்லது) பல்தொழில்நுட்ப பட்டய படிப்பு 3 ஆண்டுகள் (Polytechnic Diploma) | | | |
| படிப்பின் கால அளவு | 6 ஆண்டுகள்(தொலைதுாரக் கல்வி Distance Learning Course). | | | |
| தேர்வு முறை | **தேர்வுத்தாள்களின் எண்ணிக்கை** | | | |
| அடிப்படைக் கல்வித் தகுதி | Section A | Section B | Total Subject | Duration |
| H.SC | 10 | 9 + Lab | 19 + Lab & Project | 6 Years |
| 3 Years Diploma | 4 | 9 + Lab | 13 + Lab & Project | 6 Years |
| | **Section A** : Fundamental Engineering<br>**Section B :**<br>1. Chemical Engineering 2. Civil Engineering 3. Computer Science and Engineering 4. Electrical Engineering 5. Electronics & Communication Engineering 6. Mechanical Engineering 7. Materials and Metallurgical Engineering 8. Mining Engineering 9. Production Engineering 10. Textile Engineering. | | | |
| கல்வியின் பயன்பாடு | பணிபுரிந்து கொண்டே தொலை துாரக்கல்வி வாயிலாக பொறியியல் பட்டம் பெறலாம். அரசு மற்றும் தனியார் துறையில் பொறியாளராக வேலைவாய்ப்பு பெறலாம். அயல்நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். | | | |

## மருத்துவம், மருத்துவம் சார்ந்த படிப்புகள் மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகள்

# MEDICAL, ALLIED HEALTH SCIENCE AND SCIENCE SUBJECT COURSES

### 1. மருத்துவம் MEDICAL COURSES (MBBS)

12–ம் வகுப்பு படித்தவர்கள் மருத்துவப் படிப்பில் சேருவதற்கான விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | M.B.B.S., (Bachelor of Medicine and Bachelor of Surgery). |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12-ஆம் வகுப்பு கணிதம், உயிரியல், இயற்பியல், வேதியியல் (அல்லது) தாவரவியல், விலங்கியல், இயற்பியல், வேதியியல். |
| படிப்பு மற்றும் பயிற்சி கால அளவு | 5 1/2 ஆண்டுகள் |
| மத்திய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான தேர்வு முறை | 1. NEET - (National Eligibility Entrance Test) **இணையதள முகவரி**:- www.cbscneet.nic.in<br>2. JIPMER நுழைவுத் தேர்வு **இணையதள முகவரி** :- www.jipmer.edu.in<br>3. AIIMS நுழைவுத் தேர்வு:- www.aiimsexams.org (New Delhi, Bhopal, Bhubaneswar, Jodhpur, Patna, Raipur, Rishikesh).<br>4. Armed Forces Medical College, Pre-medical Test – Pune www.afmc.nic.in<br>5. Government Medical College and Hospital, Chandigarh (Centralised Admission through NEET) website:- www.gmch.gov.in |
| மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான தேர்வு முறை | மருத்துவக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் மாநில அளவிலான கலந்தாய்வு மூலமாக மதிப்பெண் அடிப்படையில் தேர்வு (அல்லது) அரசு அறிவிக்கும் நுழைவுத் தேர்வு –**இணையதள முகவரி :- www. health.org.in** |
| மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை | 1. அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை - 21<br>2. தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை - 26 |
| கல்வியின் பயன்பாடு | அரசு மற்றும் தனியார் துறைகளில் மருத்துவராக பணியாற்றலாம். M.D/ M.S போன்ற உயர் கல்வியைப் பயிலலாம். ஆராய்ச்சி பணிகளில் ஈடுபடலாம். தனியார் மருத்துவமனை துவங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பை பெறலாம். |

**குறிப்பு:-** மாநிலத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்களில் 15 சதவிகித இடங்கள் தேசிய அளவிலான பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## அரசு மருத்துவக் கல்லூரிகள்

| வ. எண் | மருத்துவக் கல்லூரிகளின் விவரம் |
|---|---|
| 01 | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை |
| 02 | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, இராயபுரம், சென்னை.13. |
| 03 | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை |
| 04 | கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி, சேத்துப்பட்டு, சென்னை.31. |
| 05 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு |
| 06 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் |
| 07 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் |
| 08 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி |
| 09 | மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம் |
| 10 | K.A.P. விஸ்வநாதன் அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி |
| 11 | தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி |
| 12 | வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி, அடுக்கம்பாறை, வேலூர் |
| 13 | கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி, கன்னியாகுமரி |
| 14 | தேனி அரசு மருத்துவக் கல்லூரி, தேனி |
| 15 | தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி, தர்மபுரி |
| 16 | விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி, விழுப்புரம் |
| 17 | திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி, திருவாரூர் |
| 18 | சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி, சிவகங்கை |
| 19 | சென்னை அரசு மருத்துவக் கல்லூரி, ஓமந்துாரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 20 | திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருவண்ணாமலை |
| 21 | I R T பெருந்துறை மருத்துவக் கல்லூரி, பெருந்துறை, ஈரோடு மாவட்டம் |

### 2.பல் மருத்துவம் DENTAL COURSES

12–ம் வகுப்பு படித்தவர்கள் பல் மருத்துவ படிப்பில் சேருவதற்கான விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | B.D.S., (Bachelor of Dental Surgery) |
| அடிப்படைக் கல்வித்தகுதி | 12-ஆம் வகுப்பு உயிரியல், இயற்பியல், வேதியியல், கணிதம் (அல்லது) தாவரவியல், விலங்கியல், வேதியியல், இயற்பியல். |
| படிப்பு மற்றும் பயிற்சி கால அளவு | 5 ஆண்டுகள் |
| மத்திய அரசு மருத்துவ கல்லூரி களுக்கான தேர்வு முறை | 1. NEET (National Eligibility Entrance Test) **இணையதள முகவரி**:- www.cbscneet.nic.in<br>2. Dr. Harvansh Singh Judge Institute of Dental Science, Punjab University, Chandigarh (Centralised Admission through NEET Entrance Test). **இணையதள முகவரி**:- www.gmch.gov.in |

| | |
|---|---|
| மாநில அரசு மருத்துவ கல்லூரிகளுக்கான தேர்வு முறை | மருத்துவ கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் மாநில அளவிலான கலந்தாய்வு மூலமாக மதிப்பெண் அடிப்படையில் தேர்வு. (அல்லது) அரசு அறிவிக்கும் நுழைவுத் தேர்வு **இணையதள முகவரி** :- www. tnhealth.org |
| மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை | 1. அரசு பல் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை – 1 (தமிழ்நாடு அரசு பல் மருத்துவமனை, சென்னை).<br>2. தனியார் பல் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை – 25 |
| கல்வியின் பயன்பாடு | அரசு மற்றும் தனியார் துறைகளில் பல் மருத்துவராக பணியாற்றலாம். M.D.S போன்ற உயர் கல்வியைப் பயிலலாம். தனியார் பல் மருத்துவ மனை துவங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பை பெறலாம். |

**குறிப்பு**:- மாநிலத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்களில் 15 சதவிகித இடங்கள் தேசிய அளவிலான பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 3. இந்திய மருத்துவப்படிப்புகள் INDIAN MEDICINE COURSES

12–ம் வகுப்பு படித்தவர்கள் இந்திய மருத்துவப் படிப்புகளை பயிலலாம். அதன் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | 1. B.S.M.S (Bachelor of Siddha Medicine and Surgery)<br>2. B.A. M.S.(Bachelor of Ayurvedic Medicine and Surgery)<br>3. B.H.M.S.(Bachelor of Homeopathic Medicine and Surgery)<br>4. B.U.M.S. (Bachelor of Unani Medicine and Surgery)<br>5. B.N.Y.S. (Bachelor of Naturopathy and Yogic Science). |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12-ஆம் வகுப்பு உயிரியல், இயற்பியல், வேதியியல், கணிதம் (அல்லது) தாவரவியல், விலங்கியல், வேதியியல், இயற்பியல். |
| படிப்பு மற்றும் பயிற்சி கால அளவு | 5 1/2 ஆண்டுகள் |
| மத்திய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான தேர்வு முறை | 1. National Institute of Homeopathy,Kolkatta<br>All India Entrance Exam – www.nih.nic.in<br>2.National Institute of Ayurvedha, Jaipur.<br>All India Entrance Exam – www.nia.nic.in<br>3.Health Education and Research Council of India – www.herci.in |

| | |
|---|---|
| மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான தேர்வு முறை | இந்திய மருத்துவ இயக்ககத்தால் (Directorate of Indian Medicine and Homeopathy) நடத்தப்படும் மாநில அளவிலான கலந்தாய்வு மூலமாக மதிப்பெண் அடிப்படையில் தேர்வு.<br>இணையதள முகவரி :- www.tnhealh.org |
| மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை | 1. அரசு சித்த மருத்துவக் கல்லூரிகள் – 2<br>சுயநிதி சித்த மருத்துவக் கல்லூரிகள் – 52.<br>2 அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் – 1<br>சுயநிதி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் – 6<br>3. அரசு ஊேறாமியோபதி மருத்துவக் கல்லூரிகள் – 1<br>சுயநிதி ஊேறாமியோபதி மருத்துவக் கல்லூரிகள்–9<br>4. அரசு யுனானி மருத்துவக் கல்லூரிகள் – 1<br>5. அரசு யோகா மற்றும் நேச்சுரோபதி மருத்துவக் கல்லூரிகள் – 1<br>6. சுயநிதி யோகா மற்றும் நேச்சுரோபதி மருத்துவக் கல்லூரிகள் – 4 |
| கல்வியின் பயன்பாடு | அரசு மற்றும் தனியார் துறைகளில் சித்தா / ஆயுர்வேதா / ஊேறாமியோபதி / யுனானி /யோகா மற்றும் நேச்சுரோபதி மருத்துவராக பணியாற்றலாம். M.S.M.S., / M.A.M.S / M.H.M.S / M.U.M.S / M.Y.M.S போன்ற உயர் கல்வி பயிலலாம். தனியார் மருத்துவமனை துவங்கலாம். |

## அரசு இந்திய மருத்துவக் கல்லூரிகளின் விவரம்

| வ. எண் | அரசு மருத்துவக் கல்லூரிகள் |
|---|---|
| 01. | அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை 600 106. |
| 02 | அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். |
| 03 | அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 04. | அரசு ஆயுர்வேதிக் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, காட்டூர், நாகர்கோவில் |
| 05 | அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை 600 106. |
| 06. | அரசு யோகா மற்றும் நேச்சுரோபதி கல்லூரி, அரும்பாக்கம், சென்னை 600 106 |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 129. | C.Mohan | கண்ணந்தை | 16/06/1994 பூரம் | B.Tec(ECE) (NIT Trichy) | Agri | Chennai 3.30 A.M. | 9840359359 9940659359 |
| 130. | P.K.Abinesh | மணியன் | 20/11/1996 பூரட்டாதி | B.Tech (marine) | Marine Engineer | Salem 11.00 A.M. | 9789879488/ 9444825245 |
| 131 | M.Manoj | கண்ணந்தை | 28/06/1990 | M.A. Eco-nomics | Sr.DCM Indian Railway | Erode 12.18 P.M. | 9443370311 |
| 132. | M.Sathish kumar | கூரை | 09/04/1995 பூசம் | B.E.Mech | Admin Manager Chennai | Namakkal 7.59 P.M. | 9600734177 |
| 133. | J.தனோஜ் | பண்ணை | 19/10/1990 சுவாதி | B.Tech | Senior Manager (Hipkart) | Salem 1.55 P.M. | 7904148321/ 9843320263 |
| 134. | S.நவீன் | விழியன் | 05/03/1999 அஸ்தம் | B.E. (CSE) | Software | Rasipuram 01.18 A.M. | 7904148321/ 944444346/ 866726730 |
| 135. | Dr.R.L.Prasshanth | பொருள் தந்த | 22/10/1995 உத்திரம் | MBBS., M.D., D.N.B. | Doctor | CBE 6.46 A.M. | 9443345862 9361636111 |
| 136. | K.Ashok Kumar | பனங்காடை | 25/06/1995 கார்த்திகை | M.E. | Senior Techniol (medical Device) | Salem 9.07 A.M. | 9952302325 |
| 137. | A.Rethick | கண்ணங் | 24/06/1999 சுவாதி | B.Tech., M.Tech., | Analog Engineer (Texas Instrument Pvt. Ltd., | Salem 8.37 A.M. | 9443245889 |

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 152 | B.Sarnitha | ஆந்தை | 19/5/2001 உத்திரட்டாதி | B.B.A., L.L.B., | Advocate | கோவை 4.45 A.M. | 9444404593 |
| 153 | Dr.S.மதுமிதா | ஆதி | 23/5/1999 பூரம் | M.D.Pediat-rics 1st Year | Studying | Erode 11.09 P.M. | 9489588888 |
| 154. | K.சங்கவி | பனங்காடை | 09/06/1999 ரேவதி | M.Sc.,B.Ed., | Teacher (Chennai) | Salem 11.04 A.M. | 9952302325 |

## திருத்தம் மணமகன் தேவை (மார்ச் மலரில்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 148. | D.கீர்த்தனா | தனஞ்செயன் | 07/03/1997 அவிட்டம் | B.E., | Studying | கோவை 10.00A.M. | 9965348235 |
| 149. | M.P.அமிர்தா ஸ்ருதி | பூசன் | 06/01/2000 பூராடம் | M.B.A., M.S. | Us Tax Protessional Pwc, Bangalore | சென்னை 04.07 P.M. | 7338794813/ 9443366650 |

# மணமகள் தேவை



ஜாதகர் பெயர் – A. ரித்திக் (181 c.m.)

பிறந்த தேதி – 24.6.1999

பிறந்த நேரம் இடம் – 08.37 A.M. சேலம்

நட்சத்திரம், ராசி – சுவாதி, துலாம்

தந்தை பெயர் – P.அன்பரசு

தயார் பெயர் – K.கலைராணி

குலம் – கண்ணங்குலம்

உடன் பிறந்தோர் – மூத்த சகோதரி (சுபம்)

படிப்பு – B.Tech (IIT Kanpur)
(Electrical Engineer)
M.Tech (IIT Kanpur)

தொழில் – Analog Design Engineer
(Texsas Instruments, banglore)

மாத வருமானம் – ஜாதகர் – 33 lakh/Annual
– குடும்பம் – 60 lakh/Annual

உகந்த மணமகள் – Any Degree

தொடர்புக்கு – 94432 45889 87540 04439

| | | | |
|---|---|---|---|
| | குரு சனி | | சூரி |
| | ராசி | | 1–லக் சுக் புத ராகு |
| கேது | | | மாந் |
| | | சந் செவ் | |

| | | | |
|---|---|---|---|
| | | குரு | |
| சந் | நவாம்சம் | | புத கேது |
| சுக் ராகு | | | மாந் |
| சூரி | 1–லக் | செவ் | சனி |